கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டி

52

52

பாஸ்டர் B. சாலமோன்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

Pastor B. Solomon
SERVANT OF GOD.
INDEPENDANT MINISTRY FOR CHRIST.
307. MURPHY TOWN. ULSOOR.
BANGALORE-560 008.
KARNATAKA STATE SOUTH INDIA.

கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டி!

(NEW CREATION IN CHRIST)

R. Yesuprasad
83(2) pillamma Block
Shiramapuran
Bangalore-21

பாஸ்டர் B. சாலமோன்

விலை ரூ. 5/-

வெளியிடுபவர்

B. சாலமோன்

307, மர்பி டவுன்

அல்சூர், பெங்களூர் - 560 008.

அர்ப்பணம்

சேனைகளின் கர்த்தராகிய சர்வ வல்லவரின் அளவற்ற தேவகிருபையினால் ''கிறிஸ்துவுக்குள் புதுசிருஷ்டி'' என்ற புத்தகத்தை எழுத கிருபையைத்தந்த பரிசுத்த ஆவியானவருக்கே மகிமை உண்டாவதாக!

இப் புத்தகத்தினால் வரும் மேன்மை, புகழ், மதிப்பு எல்லாவற்றையும் கர்த்தர் இயேசுவுக்கே செல்லும்படி இப்புத்தகத்தை இயேசுவின் பரிசுத்த வல்லமையின் கரங்களில் ஒப்புவித்து, அவர் மகிமையின் உன்னத பொற்பாதங்களில் விழுந்து, முத்தமிட்டு மகிமைப்படுத்தி ஸ்தோத்தரிக்கின்றேன்!

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

அணிந்துரை!

கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக!

அருமை போதகர் பி. சாலமோன் அவர்களை நன்கு அறிவேன். ஆவிக்குரிய தேவ ஊழியர். இவர் எழுதியுள்ள "கிறிஸ்துவுக்குள் புதுசிருஷ்டி" என்ற புத்தகத்தை வாசித்தேன். மிகவும் பிரயோஜனமாகவும் ஆசீர்வாதமாகவும் இருக்கிறது.

தேவ ஆவியானவருடைய ஏவுதலோடும், வேத வசனத்தின் அடிப்படையிலும், ஆதாரத்தோடும் ஆவியானவருடைய வெளிப்பாடுகளின் மூலம் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு இது ஏதுவாக அமைந்துள்ளது.

தேவ இரகசியங்கள் அடங்கிய இந்த நல்ல புத்தகத்தை எல்லோரும் வாங்கி, வாசித்து, பயனடைந்து பிறருக்கும் அறிமுகப்படுத்த வேண்டிய ஆவிக்குரிய புத்தகமாகும். இதை வாசிக்கும் எல்லா தேவ மக்களும் கர்த்தருக்குள் தங்களை புதுபித்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

சேலம் - 5
7-12-1988

பேராயர் B. டேவிட்
M.Th., D.Th.,

முகவுரை!

மறு பிறப்பில் புதுசிருஷ்டி என்ற தலைப்பில் விளக்கமாக புத்தகம் எழுதி வெளியிட தேவ சமுகத்தில் பல ஆண்டுகள் காத்திருந்து ஜெபித்து வந்தேன்!

கிறிஸ்தவ பிள்ளைகள் ஆவிக்குரிய நிலையில் வளர்ச்சி அடைவதற்காக ''கிறிஸ்துவுக்குள் புதுசிருஷ்டி" என்ற இப் புத்தகத்தை எழுத என் தேவாதி தேவனாகிய ஆவியானவர் கிருபை செய்த படியால் என் கர்த்தராகிய தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.

19 ஆண்டு கால என் ஊழியத்தின் பட்டறிவின் படியே (Experience) இயேசுவை அறிகிற அறிவில் வளரும்படியாகவும் கர்த்தரின் பிள்ளைகள் கொடுத்த செய்திகள், எழுதிய புத்தகங்கள் ஆவிக்குரிய பத்திரிகைகள் இவைகளை ஆழ்ந்து வாசித்து.

வேத வாக்கியங்களை தியானித்து ஒப்பிட்டும், என் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு பெரும் உதவியாக இருந்த ஆவிக்குரிய போதகர்கள் தீர்க்கதரிசிகள் சுவிசேஷகர்கள் இவர்களின் ஆலோசனையோடும் ஆழ்ந்த வேதாகம இரகசியங்களை பரிசுத்த ஆவியானவரின் துணை கொண்டும் இப்புத்தகத்தில் எழுதியிருக்கிறேன்!

வாசித்து பயன் அடையுங்கள்!

கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

பாஸ்டர் B. சாலமோன்.

1. மறு பிறப்பின் ஆரம்பமும் அதன் சிலாக்கியங்களும்!

மறுபிறப்பு என்றால் கர்த்தர் இயேசுவுக்குள் பிறக்கும் அனுபவமே மறுபிறப்பு என்பதாகும்! எவ்வாறு நாம் கிறிஸ்துவுக்குள் பிறப்பது?

வேதத்தில் அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை தம் இரட்சகராய் ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைப்பேர்களோ அத்தனைப்பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார் என்று கூறிவிட்டு மேலும் ஆவியானவர் கூறுகிறார்: அவர்கள் இரத்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல் தேவனால் பிறந்தவர்கள் (யோவா 1:12,13) என்றும், இப்படி கர்த்தர் இயேசுவை தன் சொந்த தெய்வமாகவும் தன் பாவங்களிலிருந்து விடுதலை பண்ணும் இரட்சகர் அவரே என்று அவர் ஒருவரையே தன் வாழ்நாள் முழுவதும் அவரையே தொழுது கொண்டு அவர் கொடுத்த வாக்குத்தத்தங்களும் கட்டளைகள் அடங்கிய வேதாகமத்தை கிறிஸ்தவர்கள் சுமந்து, அதை வாசித்து இயேசுவின் அடிசுவட்டை பின்பற்றி நடக்கிறவர்களுமே மறுபடியும் பிறந்தவர்களாகும். கிறிஸ்து உன்னில் பிறந்திருந்தால் உள்ளத்தில் மகிழ்ச்சியும், பாடுகளில் தெய்வீக ஆளுகையும் (ஊழியங்கள்)மரணத்திற்குப்பின் நித்திய ஜீவனும் உண்டு.

இப்படிப்பட்ட அனுபவமே மறுபடியும் பிறந்ததாகும். ஒருவன் மறுபிறப்பு பிறந்துவிட்டால் அவன் பரலோக ஆட்சியின் குடிமகன் என்றால் மிக்க பொருந்தும். கிறிஸ்து உன்னில் பிறந்திருந்தால் உன் ஜீவியமும் கிறிஸ்துவின் தெய்வீக ஜீவியமாக மாறும். இந்த மறுபிறப்பின் அனுபவம் ஒரு கிறிஸ்தவனுக்கு மிக மிக முக்கியமான அனுபவமாக தேவனாகிய கர்த்தரிடமிருந்து விரைந்து வருகிறது. இந்த மறுபிறப்பின் அனுபவத்தில் இயேசு எப்படி நம்மில் வாசம் பண்ணுகிறார் என்று வேதத்தில் தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்துவதை

கவனிப்போம்! ஆதியிலே தேனிடத்திலிருந்த வார்த்தை மாம்சமாகி கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார் என்று வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது!

கர்த்தர் இயேசுவின் ஆவி நம் இருதயத்தில் வாசம் பண்ணுவதே இந்த அனுபவம்! இந்த அனுபவம் நம் சரீரத்தில் ஓடும் இரத்தத்தில் இரண்டறக் கலந்து விடுகிறது. இதுவே இயேசு நம் ஆவி ஆத்துமாவில் வாசம் பண்ணுவதாகும் (யோ 1:1-5, 12-14).

இம்மறுபிறப்பின் மூலம் ஆவியாயும் மகிமையின் சரீரத்திலும் உள்ள இயேசுவைக் காண்பதும் அவரோடு ஆவியினால் பேசுவதும், அவரின் பரலோக ஆளுகைக்கு சொந்தமானவன் என்பதும் பரலோக ஆஸ்திகளுக்கு சொந்தமானவன் என்பதும் அதற்காக ஒரு கிறிஸ்தவன் இவ்வுலகத்திலிருந்தே பரலோக வாசி என்பதை நிரூபிக்கின்றான்!

(கலா 3:29; 4:6,7; ரோ 8:15).

1. மறுபிறப்பு என்றால் மனுஷீக பிறப்பிலிருந்து தெய்வீக பிறப்பின் அனுபவத்திற்குள் வருவதாகும் (மத் 8:13; மாற்கு 10:16).
2. மறுபிறப்பு என்றால் உலகத்தைவிட்டு ஜீவனுள்ள தேவனிடத்திற்கு வருகிறீர்கள் என்பதாகும் (ரோ 5:10).
3. மறுபிறப்பு என்றால் கர்த்தர் இயேசுவின் பிள்ளையாகும்படி இயேசுவை விசுவாசித்து தேவனிடத்தில் அதிகாரம் பெற்று பரிசுத்தாவியானவரின் அதிகாரத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கும் தெய்வீகக் குழந்தை என்பதாகும் (ரோ 8:14).
4. மறுபிறப்பு என்றால் மனந்திரும்பி பாவ ஜீவியத்தின் இடத்தை விட்டு, பாவ ஜீவியத்தின் சந்தர்ப்பங்கள் சூழ்நிலைகளை விட்டு, அசுத்த ஜீவியமுள்ள உற்றார், உறவினர் நண்பர்களைவிட்டு விக்கிரக தொழுகைகளை விட்டு பரி

சுத்த இடத்திற்கு வந்த தெய்வீகக் குழந்தைஎன்பதாகும் (I யோ 1:7,8; அப் 2:40).

5. மறுபிறப்பு என்றால் தன்னை பரிசுத்த ஆவியானவரி ஆளுகைக்கு ஒப்புக்கொடுத்து அவரின் வழிநடத்து தலுக்கு சம்மதம் தெரிவித்திருக்கும் இயேசுவினுடைய குழந்தை என்பதாகும் (யோவா 3:8).

6. மறுபிறப்பு என்றால், எல்லாவற்றிற்கும் என் இயேசு தான் ஆதாரம் என்றும், அவர் கட்டளைக்கு கீழ்ப்படிந்து அவர் வளர்ப்பில் தங்கி நிலைத்திருந்து, எல்லாவற்றிற் கும் கீழ்ப்படிந்து கர்த்தர் இயேசுவையே நோக்கிப் பார்த்து, ஜீவிப்பதுமே மறுப்பிறப்பின் குழந்தையாகும் (ரோ 6:22,23).

7. மறுபிறப்பு என்பது இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்ட விசுவாசியின் ஆவி ஆத்துமாவில் கிறிஸ்துவின் ஆவி இணைந்து விடுவதுமே ஆகும் (ரோ 8:9,10).

8. மறுபிறப்பு என்றால் மாசற்றதும் வாடாததுமாகிய பரலோக சுதந்தரத்திற்கேதுவாக ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார் (I பேது 1:14) என்ப தாகும்.

---

2. மறுபிறப்பு பிறந்தவர்களும் கர்த்தரின் உபதேசமும்!

வேதத்தில் வானங்களே செவி கொடுங்கள், நான் பேசுவேன் பூமியே, என் வாய்மொழிகளைக் கேட்பாயாக!

மழையானது இளம் பயிரின்மேல் பொழிவதுபோல, என் உபதேசம் பொழியும்!

பனித்துளிகள் புல்லின்மேல் இறங்குவது போல, என் வசனம் இறங்கும் என்று ஆவியானவர் இரட்சிக்கப்பட்ட கர்த்தரின் பிள்ளைகளுக்கும், இரட்சிக்கப்படாத பேர் கிறிஸ்

தவர்களுக்கும், அஞ்ஞான மக்களுக்கும் அறிவுரை கொடுத்திருக்கிறார் (உபா 32:1,2).

மேற்கூறிய வசனத்தில், 'வானங்களே!' என்று கர்த்தர் அழைப்பதானது, கர்த்தரில் மறுபிறப்பு பெற்று பூரண இரட்சிப்பில் கடந்து போய்கொண்டிருக்கும் வானத்திற்குரிய பிள்ளைகளையே குறிப்பதாக உள்ளது.

இவ்வானத்திற்குரிய கர்த்தரின்பிள்ளைகளுக்கு கர்த்தரின் உபதேசம் மிக மிக அவசியம் என்பது மேற்கூறிய வசனங்களில் தெள்ளத்தெளிவாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதைக் குறித்து ஆராய்வோம்!

மழையானது இளம் பயிரின் மீது பொழிவது போல், என் உபதேசம் பொழியும் என்று கர்த்தர் சொல்லுகிறார்! எனவே வானத்துக்குரிய கர்த்தரின் பிள்ளைகளுக்கு கர்த்தரின் உபதேசம் மிக மிக அவசியம் என காண்கிறோம்! எனவே கர்த்தரின் பிள்ளைகள் கிறிஸ்துவின் உபதேசம் பெறும்படியாக அவர்களுக்கு ஆவிக்குரிய சபை தேவைப்படுகிறது! இதுவே ஆவிக்குரிய திருச்சபை எனப்படும். இத் திருச்சபையில் அங்கம் வகிக்க ஒருவன் மறுபிறப்பின் உபதேசத்தின் ஆரம்பப்படியில் அடியெடுத்து வைக்க வேண்டியது தலையாய கடமையாக உள்ளது.

அடுத்து பூமியே, என் வாய் மொழிகளைக் கேட்பாயாக என்று கர்த்தர் பூமியை அழைக்கிறார். 'பூமியே!' என்பது இரட்சிக்கப்படாத பேர்க் கிறிஸ்தவர்களையும் அஞ்ஞானமக்களையும் அறைகூவி அழைத்து அவர் வாய்மொழிகளைகேட்டு இரட்சிக்கப்படுங்கள் என்றும் வானத்துக்குரிய பிள்ளைகளாக மாறுங்கள் என்றும் அழைப்பு கொடுக்கிறார்.

இதை, பனித்துளிகளாகிய கர்த்தரின் வசனம் பேசப்படும் இடத்தில் அஞ்ஞான மக்கள் வந்து அமர்ந்து இருக்கும் போது, புல்லின் மீது பனித்துளிகள் இறங்கி, காய்ந்த புல்லை பசுமையாக மாற்றுவதைப் போன்று, தன் வாழ்க்கை உடைந்து கிடக்கும் வாலிப சகோதர சகோதரிகளின் வாழ்க்

கயை பசுமையாக மாற்ற கர்த்தரின் வசனம் வானங்களி ருந்து இறங்கி கர்த்தரின் பிள்ளைகள் மூலமாக பேசப்படு றது என்றுகர்த்தர் பூமிக்குரிய மக்களை அழைக்கிறார்.

எனவே பெற்றோருக்கு கீழ்ப்படியாத வாலிப சகோதர கோதரிகளை தேவ சமுகத்திற்கு அழைத்து வந்து சனத்தை மட்டும் கேட்க வையுங்கள். கல்லாண இருதயம் டைந்து, ஆசீர்வாதத்தை தம்பிள்ளைகள் மீது கர்த்தர் பொழிந்து வானத்துக்குரிய பிள்ளைகளாக மாற்றுவார். அல்லேலூயா!

---

3. மனிதன் ஏன் மறுபிறப்பு பிறத்தல் வேண்டும்? மறுபிறப்பு பிறத்தலினால் பயன் என்ன?

வேதத்தில் துன்மார்க்கன் கெம்பீரம் குறுகினது என்ப தையும் மாயக்காரனின் சந்தோஷம் ஒரு நிமிஷம் மாத்திரம் நிற்கும் என்பதையும் அவன் எலும்புகள் அவனுடைய வால வயதின் பாவங்களினால் நிறைந்திருந்து அவனோடே கூட மண்ணில் படுத்துக்கொள்ளும் (யோபு 20:4,11) என்று வேதத்தில் பாவியான மனுஷனைக் குறித்து வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது.

ஒரு பாவியான மனிதனின் பாவங்கள் அவன் ஜீவிய காலமெல்லாம் அவன் ஆவி ஆத்துமா சரீரத்தோடு பிணைக் கப்பட்டும் இரத்தத்தோடு இரத்தம் கலந்தும்அவன் மரிக்கும் போது, அவன்தன் பாவங்கள் அவன் எலும்பை விட்டு பிரி யாமல் இருந்து அவனோடே கூட மண்ணில் படுத்துக் கொள் ளுமாம். அந்த பாவியான மனிதனின் எலும்பு மண்ணோடு மண்ணாகியும் கூட அவன் பாவங்கள் எலும்பின் தூளிலிருந்து பிரியாதாம்! கர்த்தர் இயேசுவின் வருகையின் கடைசி நாளாகிய உயிர்த்தெழுதலின் நாளில் கோடிக்கணக்கான பாவிகளோடு இவனும் உயிர்த்தெழுந்து வெள்ளை சிங்கா சனத்திற்குமுன் இவனும் நியாயத்தீர்ப்புக்காக நிற்பானும்.

அப்பொழுது இவன் செய்த பாவங்களுக்கேற்ற தண்டனையை நரகத்தில் அடைந்து கொடூரமாய் அனுபவிப்பான் என்பதை வேதம் தெளிவுப்படுத்துகிறதை வாசிப்போமா!

பின்பு நான் வெள்ளை சிங்காசனத்தையும் அதின்மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன்! அவருடைய சமுகத்திலிருந்து வானமும் பூமியும் அகன்று போயின! அவைகளுக்கு இடங்காணப்படவில்லை என்றும்,

மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன். அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது. அப்பொழுது அந்த புஸ்தகங்களில் எழுதப்பட்டதின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத்தீர்ப்பு அடைந்தார்கள் என்றும்,

அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்னிக் கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம் என்றும்,

ஜீவபுஸ்தகத்திலே எழுதப்படாதவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்னி கடலில் தள்ளப்பட்டான் என்று வேதத்தில், ஒரு பாவியானவன் இவ்வுலகத்தின் வாழ்க்கையிலிருந்து கடந்து, நரகத்தில் அவன் அக்னியில் அனுபவிக்கப் போகும் வேதனைகளின் நிலைமையை வேதம் அழகாக சித்தரித்து காட்டுகிறது. கனமுள்ள மனிதன் அழிந்து போகும் மிருகங்களுக்கு ஒப்பாக இருக்கிறான் (சங் 49:20).

மேலும் வேதத்தில் ஆவியானவர் பாவங்களைக் குறித்தும் அவைகளின் கிரியைகளைக் குறித்தும் சொல்லும் போது,சிலருடைய பாவங்கள் வெளியரங்கமாயிருந்து, நியாயத்தீர்ப்புக்கு முந்திக்கொள்ளும், சிலருடைய பாவங்கள் அவர்களை பின் தொடரும் (1திமோ 5:24,25) என்று தெள்ளத்தெளிவாக குறிக்கப்பட்டிருக்கிறது.

எனவே சிலருடைய பாவங்கள் சிறிது சிறிதாக வளர்ந்து பாவம் பூரணமாகும்போது பாவம் செய்த மனிதனை மரணத்

திற்குள்ளாக்கி அந்த பாவம் நியாயத்தீர்ப்புக்கு முந்திக் கொள்கிறது என்று அறிகிறோம்!

சிலருடைய பாவங்கள் கொஞ்ச கொஞ்சமாக அவர்களைப் பின்தொடர்ந்து நோய்களையும், வேதனைகளையும், பாடுகளையும் கொடுப்பதுமல்லாமல் அந்த மனுஷனின் பிள்ளைகளின் பிள்ளைகளைத் தாக்கி பாவம் பின்தொடர்ந்து அவன் சந்ததி முழுவதும் கொடூரமான நோய்களினுலும் சகிக்க முடியாத வேதனைகளைக் கொடுத்தும் அவன் பாவங்கள் பின்தொடருகிறது என அறிகிறோம்!

எனவே ஒரு பாவியாகிய மனிதனின் பாவம் பின்தொடராதபடியும், பாவத்தை அழிக்க வந்த கர்த்தர் இயேசுவை தன் உள்ளத்தில் இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்போது, மனிதன் மறுபிறப்பு அடைகிறுன். இனி அவன் பாவங்கள் நினைக்கப்படுவதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறுர்!

இவ்வாறு மறுபிறப்பு பிறக்கும்போது அவனைக் கர்த்தர் இயேசு தம் இரத்தத்தினுல் சுத்திகரித்து அவன் எலும்பிலுள்ள பாவங்களை முற்றிலும் நீக்கி தம் உயிர்த்தெழுதலின் ஆவியினுல் நிரப்பி பாவம் மேற்கொண்டு வராதபடி தடுப்புசுவராக ஆவியானவர் பாதுகாவலாக அவன் எலும்புகளில் ஆவியானவர் தங்கி உயிர்த்தெழுதலின் நாளில் அவனை உயிரோடு எழுப்பக் காத்திருக்கிறுர் (ரோமர் 8:11).

அவன் மரித்து கல்லறையில் வைக்கப்பட்டாலும் கர்த்தர் தம் ஆவியால் எழுப்பும்போது மகிமையின் சரீரத்ரோடு அம்மனிதன் உயிர்த்தெழுகிறுன்.

கர்த்தர் நம்மை எழும்பும்படியாய் நம் எலும்பில் தேவாவியானவர் பற்றியிருக்கிறுரா? உயிர்த்தெழுதலில் ஆழ்ந்த நம்பிக்கை உண்டா? முற்பிதாவாகிய யோசேப்பு தன் எலும்பைக்குறித்ததான கரிசனை அவனுக்கு எவ்வளவாக இருந்தது என்பதை வேதத்தில் வாசித்து அறிந்து கொள்ளுங்கள் (ஆதி 50:25; 13:19).

இதை வாசிக்கிற சகோதரனே சகோதரியே, தேவாவியினால் பிறந்திருக்கிறீரா? வேதத்தில் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார் (ரோமர் 8:11) என்று பரிசுத்தாவியானவர் வெளிப்படுத்தியிருக்கிறார்! எனவே கிறிஸ்தவ சகோதர சகோதரிகளே, நீங்கள் தேவனால் பிறந்திருக்கிறீர்களா?

---

4. மறுபிறப்பும் தேவ கிருபையும் தேவ சாயலும்!

பாவத்தை விட்டு மனந்திரும்பி வருகிற ஒரு மனிதனுக்கு மறுபிறப்பு என்பது ஒரு ஆரம்பமே! ஆரம்பத்தில் அவன் புதியவாழ்வை ஆரம்பித்தாலும் அதற்கு அடிப்படையானது பரிசுத்தம்தான் (சங் 119:9). இந்த பரிசுத்தம் தேவனுடைய வார்த்தையில்தான் ஆரபிக்கிறது. அந்த வார்த்தை இயேசுவே!

வானதி வானங்களும் பூமியும் அதின் நிறைவும் போற்றும் இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்டவன் யாவரும் புதிய வாழ்வை அடைந்தவர்களே!

புதிய வாழ்வுக்கு ஆதாரம் இயேசுவே! இவர் இவ்வுலகத்தில் மனுஷ அவதாரம் எடுத்து வந்தபோது, அவர் பேச்சிலே பரிசுத்தம்; அவர் எண்ணங்களிலே பரிசுத்தம்; அவர் உடையிலே பரிசுத்தம்! அவர் பாவனைகளிலே பரிசுத்தம்! அவர் மனதிலே, அவர் உள்ளத்திலே பரிசுத்தம்; அவர் பார்வையிலே பரிசுத்தம்!

அவர் உள்ளொன்று வைத்து புறமொன்று பேசவில்லை! அவர் பேச்சிலே ஒன்றுபேசி கைகளில் சாடை காட்டி, இமைகளை அசைத்து, புருவங்களை நெறித்து, கண்களின் அசைவிலே பாவம் செய்யவில்லை.

ஆகவேதான் கர்த்தர் இயேசு ஜனங்களைப் பார்த்து என்னில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக் கூடும் என்று உலகத்தைப் பார்த்துக் கேட்டவர் கர்த்தர் இயேசு ஒருவரே (யோ 8:46).

இந்த வார்த்தையை வானத்திலுள்ள தேவாதி தேவனும் தேவ தூதர்களும் கேட்டார்கள் என்று நான் விசுவாசிக்கின்றேன்! இப்படிப்பட்ட பரிசுத்தரை ஏற்றுக் கொண்டு அவரைப்போல் நடக்க தீர்மானித்து பின்பற்றுகிறவன் புதியவாழ்வை தொடங்குகிறவனாவான்!

இப்படிப்பட்ட மனிதனே இவ்வுலகத்தில் பரிசுத்தத்தின் பாதையின் ஆரம்பத்தில் தன் முதல் அடியை எடுத்துவைக்கும் பரிசுத்தவானாகும்!

உலகத்திலுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒரு சாண் ஏறினால் முழங்கை அளவு சறுக்குகிறது என்று சொல்வது உண்மைதான். ஏன் சறுக்குகிறது என்றால், ஒன்று, பிடிப்பு இல்லையானால் சறுக்கும். அல்லது வழவழப்பு இருந்தால் சறுக்கும். இந்த வழவழப்பு இயேசுவினிடத்தில் இல்லை. இவ்வுலகத்தில் தீர்மானத்தோடும் தேவ சித்தத்தோடும் இவ்வுலகத்தில் வந்தார். கல்வாரியில் தன் ஜீவனை உலக மக்களுக்குக்கொடுத்து, தன் தீர்மானத்தை நிறைவேற்றி, புதிய உடன்படிக்கையை உலக மக்களுக்குமுன் தம்பிள்ளைகள் அறிய நிலைப்பெறச் செய்தார். ஏன் என்றால் அவர் தேவனின் வார்த்தையாகும்.

எனவே ஒரு மனிதன் இயேசுவுக்குள் புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கும்போது, அவனுக்குள்பழைய வாழ்க்கை, பழைய சுபாவம், பழைய தீர்மானங்கள் எல்லாம் ஒழிந்து கிறிஸ்துவுக்குள் எல்லாம் புதியவைகளாக தொடங்குகின்றன.

எனவே முதலாவது கிறிஸ்துவில் ஆரம்பித்து வளருகிற மனிதனுக்கு புதிய வாழ்க்கை தொடங்குகிறது (IIகொரி 5:17). அடுத்து புதிய சமாதானம் தொடங்கு

கிறது (யோ 14:27 பிலி 4:7). புதிய விடுதலை தொடங்கு கிறது (யோ 8:31-32,36). புதிய ஆற்றல் உண்டாகிறது (பிலி 4:13 எபேசி 6:10-11). புதிய தூய்மை பற்றிபிடிக் கிறது (கலா 5:24,25). புதிய மகிழ்ச்சி எதிர் நோக்கி வருகிறது (ரோ 5:1 யோவா 16:24) தேவனோடு புதிய உறவு ஆரம்பிக்கிறது (I யோ 3:1). புதிய நம்பிக்கை தோன்றுகிறது (II திமோ 1:7,12). புதிய ஆவலும் புதிய எதிர்பார்ப்பும் உண்டாகிறது (யோவா1 4:2-3).

இப்புதிய வாழ்க்கை, இயேசு நம்பாவங்களுக்காக மரித்தார் என்று உள்ளத்தில் முழு மனதோடு விசுவாசிப்பதின் மூலமாக வும், நம்பாவங்களுக்காகவும் இயேசு மரித்து உயிரோடு எழுந்து நம்மை அவரில் நடத்த ஜீவிக்கிறார் என்று உயிர்த் தெழுந்த இயேசுவின் மீது விசுவாசம் வைப்பதின் மூலமாக வும் புது வாழ்வு நம்மில் ஆரம்பிக்கின்றது. இதுதான் மறுபிறப்பு.

அடுத்து ஆவியில் வளர்ச்சி பெற தேவனின் வேதத்தைக் கையில் ஏந்தி உள்ளத்தில் கட்டளையை ஏற்று, மனதில் செயல்படுத்தி கிரியையில் காட்டும் போது விசுவாம் உறு துணையாயிருந்து, பரிசுத்தபாதையில் தேவனை நோக்கி வழி நடத்த வழிவகுக்கிறது.

ஒருமனிதன் மறுபிறப்பு பிறக்கும் போது தேவ பிர சன்னம் அந்நிமிடமே அம்மனிதனை ஆட்கொண்டு அவன் ஆவி ஆத்துமா சரீரத்தை வழிநடத்தி கலங்கரை விளக்கமாக அமைகிறது. இருளிலே நடந்த மனிதன் இப்பொழுது ஒளியிலே நடக்க ஆரம்பிக்கின்றான். அவன் தன் வழிகளில் இடறுவதில்லை!

சூரியனிடமிருந்து வெளிச்சம் பூமிக்கு வந்தடைவதற்கு 8 நிமிடங்கள் ஆகிறது. பூமியிலிருந்து சூரியன் ஒன்பது கோடியே முப்பத்தோரு லட்சம் மைல்கள் தூரத்தில் உள்ளது.

ஒருமனிதன் மனந்திரும்பின மாத்திரத்தில் கோடா கோடிக் கணக்கான மைல்கள் தூரத்திலுள்ள தேவனிட

...ந்து இமைப் பொழுதிற்குள் தேவனின் பிரசன்னம் மனந்
...ரும்பிய மனிதனின் ஆவி ஆத்துமா சரீரத்தை ஆட்கொள்
...றது.

இதனுல் பரலோகமே சந்தோஷமடைகிறது என்றும்
...வதத்தில் காண்கிறோம் (லூக்கா 15:7). இந்த தேவ பிர
...ன்னத்திற்கு மூலபாஷையில் தேவனின் பிரகாசம் என்றும்
வெளிச்சம் என்றும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

இதையே தேவ கிருபை என்றும் நம் வேதம் தெரிவிக்
...றது. பம்பாயில் ஒரு பெரிய கட்டிடத்தின் நுழைவாயிலில்
ஒரு வயதான பெரியம்மா நுழைந்தார்கள். அங்கு ஒரு
...க்கத்தில் Lift Box என்ற உயர தூக்கி எந்திரப் பெட்டியை
...ர்ந்து கவனித்துக் கொண்டேயிருந்தார்கள். அப்பொழுது
அப்பெட்டியின் கதவு திறந்தவுடன் ஒரு வயதான பாட்டி
...காலே ஊன்றிக்கொண்டே அப்பெட்டியினுள் சென்றுர்கள்.
...றகு அப்பெட்டி மேலே சென்று விட்டது. பிறகு 3 நிமிடத்
...ற்குள் அப்பெட்டி கீழே இறங்கி வந்து கதவு திறக்கப்பட்ட
...டன் உள்ளேயிருந்து ஒரு இளம் பெண் நவநாகரீக உடை
...ல், டக், டக் என்று நடந்து புன்னகையோடு வெளியே
...ந்தாள். இதைப்பார்த்துக் கொண்டிருந்த அந்த பெரியம்மா
...ன் கிராமத்திற்கு சென்று தன் கிராமத்திலுள்ள மக்களிடம்
...ம்பாயில் ஒரு கட்டிடத்தின் உள்ளே ஒரு அதிசயப்பெட்டி
இருக்கிறது. அதில் வயதான பெரியவர்கள் சென்றுல்
3 நிமிடத்தில் வாலிபப் பெண்ணுக வாலிபனுக வரலாம்.
இதை நான் நேரில் கண்டேன் என்று அந்த பெரியம்மா
கிராம மக்களிடம் சொன்னுர்களாம். யாருக்குத் தான்
ஆசையிருக்காது? மீசை நரைத்து போனுலும் ஆசை நரைத்து
போகாதல்லவா!

உலகத் தோற்றம் முதல் இந்நாள் வரை பாட்டியை
அல்லது தாத்தாவை மறுபிறப்பின் நிலைமையில் சிறு பெண்
ணுகவோ, வாலிபனுகவே மாற்றுவதற்கு எந்த எந்திரங்
களும், மருந்துகளும் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டதாக
தெரியவில்லை!

ஆனுல் வேதத்தில் ஆச்சரியமான முறையில் மனிதன் புதுசிருஷ்டியாக மாற்றப்படுவதற்கு மிக மிக சுலபமாகவும் இலவசமாகவும் சொல்லப்பட்டிருகிறது. இதை குறித்து வேதம் சொல்லப்பட்டிருக்கிறதை வாசிப்போம

ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் அவன் புதுசிருஷ்டியாக இருக்கின்ருன்; பழையவைகள் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின என்றும் சொல்லப்பட்டிருக்கிறது (II கொ 5:17). அவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பா இனிமரணமுமில்லே, துக்கமுமில்லே, அலறுதலுமில்லே. வருத்முமில்லே. முந்தினவைகள் ஒழிந்து போயின. ஆண்டவர் இயே கிறிஸ்துவோடு அறையப்பட்டவர்களில் ஒருவன் திஷ்மா மற்ருெருவன் கிஷ்தாஸ் என்பவர்களாகும்! இவர்களி திஷ்மாஸ் என்பவன் கர்த்தர் இயேசுவை சொந்த இரட்சராக ஏற்றுக் கொண்டதினிமித்தம் அவன் உள்ளான மன மறுபிறப்பு அடைந்தது என்றும், வசனத்தின் மூலம் அவ ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டான் என்றும் தேவ ஆவியால் ஆட்கொண்டான் என்றும் பரலோக ராஜ்யத்திற் சொந்தமானுன் என்றும் வேதம் சான்று பகருகிறது.

எனவே திஷ்மாஸ் என்ற அந்தக் கள்ளன், சிலுவையில் அறையப்பட்ட நிலேயிலேயே மனந்திரும்பினுன்; கர்த்தரை ஏற்றுக் கொண்டான்; உள்ளான மனுஷனில் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டான்; தேவாவியினுல் நிரப்பப்பட்டான்; தேவசாயலில் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டு, மகிமையின் சாயலில் எழுந்திருக்க உயிர்த்தெழுதலுக்குப் பங்காளியானுன். அக்கள்ளனுக்கு வேருெரு சமயம் இல்லாததினுல், மேற் குறித்த கட்டளேகளுக்கும் உடன்படிக்கைக்கும், விதிவிலக்குக்கும் (Execption) சிலாக்கியமும் கிடைத்திருக்கிறது.

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, உங்களுக்கு எவ்வளவோ சமயமிருந்தும் கிறிஸ்துவின் கட்டளேயை நிறைவேற்றினீர்களா? இதுவரை கர்த்தர் இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொள்ளாத சகோதரனே, சகோதரியே, உன்

உள்ளான ஆவிக்குரிய மனிதன் புதிய சிருஷ்டியாக மாற்றப்பட்டிருக்கின்ருனு? புதசிருஷ்டியாக மாற்றப்பட. உனக்கு விருப்பமில்லையா? வேதத்தில் தம்முடைய சாயலாக மனுஷனைச்சிருஷ்டித்தார் என்றும் அவனை தேவசாயலாகவே சிருஷ்டித்தார் என்றும் (ஆதி 1:27) வெளிப்படுத்துகிறது.

வேதத்தில்: பரிசேயர், தங்கள் சீஷர்களையும், ஏரோதியரையும் இயேசுவினிடத்தில் அனுப்பி, இராயனுக்கு வரி கொடுப்பது நியாயமோ, அல்லவோ? அதை எங்களுக்கு சொல்லும் என்று கேட்டார்கள்.

அதற்கு கர்த்தர் வரிக்காசை எனக்குக் காண்பியுங்கள் என்ருர். அவர்கள் ஒரு பணத்தை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். அப்பொழுது இயேசு இந்த சொரூபமும் மேலெழுத்தும் யாருடையது என்று கேட்டார். அதற்கு அவர்கள் இராயனுடையது என்ருர்கள். அதற்கு இயேசு அப்படியாளுல் இராயனுடையதை இராயனுக்கும் தேவனுடையதை தேவனுக்கும் கொடுங்கள் என்ருர்.

இங்கே தேவனுடையது என்ருல் என்ன? ஆதாம் முதல் கடைசி மனுஷன்வரை கர்த்தர் கொடுத்ததை இழந்துவிட்டிருக்கிருர்கள். அதை அவர்கள் திரும்ப கொடுக்கவேண்டும் என்று கர்த்தர் இயேசு உலக மக்கள் அனைவரையும் கேட்கிருர். அதுதான் தேவசாயல்! தேவசாயல்!! தேவசாயல்!!!

விசுவாசிகள் காணிக்கையை வரிகட்டுவதுபோல் கட்டிவிட்டால் தேவசாயல் நிச்சயமாகக் கிடைக்காது. இது மறுபிறப்பின் ஆரம்பமும் ஆகாது! இந்த தேவசாயலை ஆதாமும் ஏவாளும் ஏதேனில் கீழ்ப்படியாமையினுல் இழந்து போனுர்கள். அவர்களை தொடர்ந்து எல்லாரும் பாவிகளாகி தேவசாயலை இழந்து போனுர்கள். எனவே நம் கர்த்தர் இரக்கம் பாராட்டி தம் சொந்தகுமாரனுகிய இயேசுவை கல்வாரிக்கு அனுப்பி தன் ஜீவனைக்கொடுத்து தேவசாயலை மீண்டும் வாங்கிக்கொடுத்தார். இயேசுவை இரட்சகராக ஏற்று

கட்டளைக்கு உடன்படுகிறவர்கள் தேவசாயலைப் பெற்று கொள்கிறார்கள்!

தேவசாயல் என்ற வார்த்தை மூலபாஷையாகி எபிரேய மொழியில் தேவனைப்போன்றே சுபாவங்க மாறுதல் என்றும் மொழிப் பெயர்க்கப்பட்டிருக்கிறது.

---

5. விருத்தசேதனமும் புதுசிருஷ்டியும் பெயர் மாற்றுதலும்!

கர்த்தர் ஆபிரகாமுக்கு தரிசனமாகி இந்த விருத்த சேதன உடன்படிக்கையை கர்த்தர் ஏற்படுத்தினார். இஸ்ர வேலர்களை தம் சொந்த ஜனமாக தெரிந்து கொண்டதற்கு அடையாளமாக மாமிசத்தில் செய்யப்படும் விருத்த சேதனத்தை ஏற்படுத்தினார். எனவே நுனித்தோலை அறுத் தல் என்பது இச்சையை விலக்கி விடுதல் என்பதாகும் (ஆதி 17:9-11).

ஆகவே விருத்த சேதனத்தின் உடன்படிக்கையை நிறை வேற்றினவன் நியாயப் பிரமாண கட்டளைக்கும் கீழ்ப்படிய வேண்டும் என்பதையும் வேதம் தெள்ளென விளக்குகிறது.

கர்த்தர் ஆபிரகாமோடு பேசும்போது, உன்னை மிகவும் அதிகமாய்ப் பலுகப்பண்ணி உன்னிலே ஜாதிகளை உண்டாக்கு வேன். உன்னிடத்திலிருந்து இராஜாக்கள் தோன்றுவார் கள். இவ்வாறு இராஜ பரம்பரையை தோற்றுவிக்கும் உனக்கும் உன் இராஜ சந்ததியினருக்கும் நான் தேவனாய் இருக்கும்படி எனக்கும் உனக்கும் உன் இராஜ பரம்பரைக் கும் நான் தேவனாயிருக்கும்படி எனக்கும் உனக்கும் உனக்குப் பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததிக்கும் நடுவே நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன் என்றார் (ஆதியாகமம் 17:6,7).

பின்னும் தேவன் ஆபிரகாமை நோக்கி நீ பரதேசியாய் தங்கி வருகிற கானான் தேசம் முழுவதையும் உனக்கும் உன

குப்பின் வரும் சந்ததிக்கும் நித்திய சுதந்தரமாகக் கொடுத்து
நான் அவர்களுக்கு தேவனுயிருப்பேன் என்ருர்.

இந்த விருத்தசேதன உடன்படிக்கையின் மூலம் அறிந்து
கொள்வது என்னவென்ருல், தேவனுல் பிரித்தெடுக்கப்பட்ட
சந்ததி என்றும் ராஜ பரம்பரை தோன்றுவது ஆபிரகாமின்
சந்ததியின் மூலமாகவே என்பதை அறியவும், கானுனே
கொடுப்பதும் அவர்களுக்காகவே என்பதை உலகம் அறிய
வும் இவ்வுடன்படிக்கையை கர்த்தர் ஏற்படுத்திஞர்!

இவ்விருத்தசேதன உடன்படிக்கை இஸ்ரவேலருக்கு
பெருமைப்படவும், தேவ ஜனம் என்கிற புகழை வெளிப்
படுத்தவும் ஏதுகாரணமாக இருந்தது என்பது தெள்ளென
விளங்குகிறது. காலங்கள் கடந்த போது, குறிப்பாக புதிய
ஏற்பாட்டின் காலமாகிய அப்போஸ்தல காலத்திலும் யூத
கிறிஸ்தவர்கள் புறஜாதி கிறிஸ்தவர்களுடைய கருத்து வேறு
பாடு ஏற்பட மூலகாரணமாக விருத்த சேதனம் இருந்திருக்
கிறது. எனவே மாம்சத்தின் படியான விருத்தசேதனம்
போதும் என்ற மனப்பான்மையோடு யூதர்கள் ஜீவித்து
நியாயப் பிரமாணத்துக்கு விரோதமாக பாவம் செய்து
விருத்தசேதன உடன்படிக்கையை மீறிஞர்கள்.

எனவே கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியின் மூலம் யூதர்
களை எச்சரிப்பதை வாசிப்போம். யூதா மனுஷரே,
எருசலேமின் குடிகளே, உங்கள் கிரியைகளுடைய பொல்லாப்
பினிமித்தம் என் உக்கிரம் அக்கினியைப் போல எழும்பி
அவிப்பார் இல்லாமல் எரியாதபடிக்கு நீங்கள் கர்த்தருக்
கென்று உங்களை விருத்தசேதனம் பண்ணி உங்கள் இருதயத்
தின் நுனித்தோலை நீக்கிப் போடுங்கள் என்ருர்
(எரேமியா 4:4).

மேலும் ஸ்தேவான் என்ற தேவனுடைய மனுஷன்
ஆலோசனை சங்கத்தில் ஜனங்கள் மத்தியில் பேசும்போது,
வணங்காக் கழுத்துள்ளவர்களே இருதயத்திலும், செவிகளி
லும் விருத்த சேதனம் பெருதவர்களே உங்கள் பிதாக்களைப்
போல நீங்களும் பரிசுத்தாவிக்கு எப்பொழுதும் எதிர்த்து

நிற்கிறீர்கள் என்று யூதர்களை கண்டித்து பேசுகிறதைப் பார்க்கிறோம்!

புதிய ஏற்பாட்டின் காலத்திலே மாமிச விருத்தசேத னத்தைப் பற்றிய மாறுபாடான கருத்து ஒன்று ஏற்படத் தொடங்கியது. வேதத்தில் இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்ற (லூக்கா 9:10) வசனத்திற்கேற்ப கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உலக அனைத்து மக்களுக்கும் இரட்சகர் என்பது அறிய வருகிறது. எனவே இயேசுகிறிஸ்து யூதர்களை மாத்திர மல்ல உலகத்தின் சகல மக்களையும் இரட்சிக்கும்படியாக உலகத்தில் இரட்சகராக வந்தார் எனப்பார்க்கிறோம்!

பரி. பவுல் ரோமருக்கு எழுதின நிருபத்தில் நீ நியாயப் பிரமாணத்தை கைக்கொண்டு நடந்தால் விருத்த சேதனம் பிரயோஜனமுள்ளது தான்; நீ நியாயப் பிரமாணத்தை மீறி நடந்தால் உன் விருத்த சேதனம் விருத்தசேதனமில்லாமை யாயிற்றே (ரோமர் 2:25) என்கிறார். மேற்குறித்த வசனத் தின் கருத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் யூதருடைய பாரம் பரியங்களைக் குறித்து பேசும்போது, விருத்தசேதனத்தை மட்டும் கைக்கொண்டு, நியாயப் பிரமாணத்தை மீறுதல் எவ்வளவு தவறானது என்று கூறுகிறார்.

மேலும் அப். பவுல் கூறுமிடத்து, ஆதலால் புறம்பாக யூதனானவன் யூதனல்ல, புறம்பாக மாமிசத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதனமல்ல என்றும் உள்ளத்திலே யூதனானவனே யூதன்; எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின் படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்த சேதனம்; இப்படிப்பட்டவனுக்குரிய புகழ்ச்சி மனுஷராலே அல்ல. தேவனாலே உண்டாயிருக்கிறது (ரோ 2:28,29) என்கிறார்.

எனவே இஸ்ரவேலின் காணியாட்சிக்கு புறம்பாக இருந்த நம்மையும் கிறிஸ்தேசு தம் பரிசுத்த இரத்தத்தினால் மீட்டெடுத்து தமக்கு சொந்தமாக தெரிந்து கொண்டார்.

இதைக்குறித்து பேதுரு பேசும் பொழுது: நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்கு சொந்த ஜனமாயும் இருக்கிறீர்கள் என்று கூறுகிருர்.

மேற்குறித்த I பேது 2:9 ஆம் வசனத்தை ஆதியாகமம் 17:6 ஆம் வசனத்தின்படி ஒப்பிட்டுப் பார்ப்போமாஞல், ராஜரீகசந்ததி புறஜாதியாருக்கும் கிடைத்தது எவ்வளவு மேன்மையுள்ளதாக இருக்கிறது என்பதை அறியக் கூடும்!

ஆவிக்குரிய பிரகாரமாக நம்மையும் இயேசு கிறிஸ்து ஆவிக்குரிய இஸ்ரவேலராக மாற்றியிருக்கிருர். இதைக் குறித்து பிலிப்பியர் நிருபத்தில் வாசிக்கும்போது, ஏனெனில், மாமிசத்தின் மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினுலே தேவனுக்கு ஆராதனை செய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மை பாராட்டுகிற நாமே விருத்தசேதனமுள்ளவர்கள் (பிலிப்பியர் 3:3) என்று கூறப்பட்டுள்ளது.

எனவே மாமிச விருத்த சேதனத்தைவிட ஆவியின்படி நாம் பெற்றிருக்கின்ற விருத்தசேதனம் மகாமேன்மையும், விசேஷித்ததும் சிறப்புள்ளதும் என்பதை தொடர்ந்து ஆராய்வோம்!

கலாத்தியர் நிருபத்தில், கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை விருத்த சேதனமில்லாமையும் ஒன்றுமில்லை; புது சிருஷ்டியே காரியம்! என கூறப்பட்டுள்ளது (கலா 6:15,16,17).

மேலும் கொரிந்தியருக்கு எழுதும் நிருபத்தில் இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிருன்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம்

புதிதாயின என்று பவுல் அப்போஸ்தலன் பரிசுத்தாவியான வரின் ஏவுதலினால் தெளிவாக எழுதிபோந்தார்.

எனவே இவ்வுலகத்தில் கிறிஸ்தவனுகப் பிறப்பதினாலோ கிறிஸ்தவ பாரம்பரியங்களினால் வளர்க்கப்படுவதினாலோ பேர்க்கிறிஸ்தவ குடும்பத்தில் பிறப்பதினாலோ எவ்வித பெருமையும் கிடையாது. மாமிசத்திலே பிறப்பதல்ல ஆவியிலே பிறக்க வேண்டும்; கிறிஸ்துவுக்குள்ளாக புதிய மனிதனாக மாற்றப்பட வேண்டும்.

இப்புதிய மனிதனாக மாற்றப்பட நீ என்ன செய்ய வேண்டுமென்றால், இஸ்ரவேலின் போதகனாகிய நிக்கொதேமு இயேசுவைப்பார்க்க வந்து அந்த இராக்காலத்திலேயே கர்த்தர் இயேசுவை, சொந்த இரட்சகராக எப்படி ஏற்றுக் கொண்டானோ அப்படியே, இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் கொடிய இராக்காலத்தில் ஆண்டவராகிய இயேசுவினிடத்தில் வந்து, உங்கள் பாவங்களை அறிக்கை செய்து பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டு கிறிஸ்துவைப் பின்பற்றி நடக்கும்போது நீ புது சிருஷ்டியாக மாறி விட்டாய் என்று சாட்சியாகக் கூடும்! மேலும் விருத்தசேதனம் ஒரு உடன்படிக்கை என்று அறிகிறோம்! தேவன் ஆபிரகாமோடு பேசினபோது சொன்னது: இப்படி என் உடன்படிக்கை உங்கள் மாமிசத்தில் நித்திய உடன்படிக்கையாக இருக்கக் கடவது (ஆதி 17:13).

ஆவிக்குரிய பிரகாரமாக ஞானஸ்நானத்தைக் குறித்து பேதுரு எழுதும்போது மூழ்குதல் ஞானஸ்நானமானது மாமிச அழுக்கை நீக்குதலாயிராமல் தேவனைப் பற்றும் நல் மன சாட்சியின் உடன் படிக்கையாயிருந்து இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது என்று அறிகிறோம்! மேலும் விருத்தசேதனம் ஆண்களுக்கு மட்டும்தான். பெண்களுக்கு விருத்தசேதனம் இல்லை! ஆகவே இந்த விருத்தசேதனம் ஞானஸ்நானத்திற்கு நிழல் என்று எடுத்துக்கொண்டாலும் பெண்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது தகுதியல்ல என்பதாகிறது.

எனவே விருத்தசேதனம் ஞானஸ்நானத்திற்கு நிழலாக இருக்கிறது என்று எடுத்துக்கொண்டாலும், இதைவிட மேன்மையானது மனந்திரும்புதலும் மனம் மாறுதலும் தான் விருத்தசேதனத்திற்கு நிழல் ஆக இருக்கிறது என்றால் பொருந்தும் (ரோமர் 2:27-29 கொலோ 2:11). ஆகவே விருத்தசேதனம், மனந்திரும்புதலுக்கும், ஞானஸ்நானத்திற்கும் நிழலாக இருக்கிறது என்றால் மிக்க பொருந்தும்.

எனவே விசுவாசித்து மனந்திரும்பாமல் ஞானஸ்நானம் எடுத்தால் அப்படிப்பட்ட பரிதபிக்கப்பட்டவன் இந்த உலகத்தில் தேவபார்வையில் வேறு எவனுமில்லை! (மாற்கு 16:16). ஆகவே ஞானஸ்நானம் எடுக்கிறவனும் மனந்திரும்பி இருக்க வேண்டும்! ஞானஸ்நானம் கொடுக்கிறவனும் யோக்கியனாக இருக்கவேண்டும்.

அதாவது மனந்திரும்பி பரிசுத்தாவான்களிடம் ஞானஸ்நானம் பெற்று ஆவியின் அபிஷேகம் பெற்றவனாகவும், பரிசுத்தத்தைக் காத்துக்கொண்டு நடக்கிறவனாகவும் இருக்க வேண்டும் என்பது தேவ கட்டளை! அப்படிப்பட்டவன் ஞானஸ்நானம் கொடுக்கலாம். (எபிரேயர் 5:4; யாத்28:1,2; யாத் 40:15; எண் 17:18; எண் 18:20-24; ரோமர் 9:6-8; கலா 3:16; ரோ 2:28,29; அப் 1:8, 2:1-4; I கொரி 9:14).

எனவே மேற்குறித்த தகுதிகள் உடையவர்கள் ஞானஸ்நானம் கொடுக்க தகுதிபெற்றவர்கள்! இல்லாவிட்டால் நீர் இந்த பரிசுத்தமான கிறிஸ்துவின் ஊழியத்தில் தலையிட வேண்டாம் (எண் 18:7; சங் 50:16-22; எபிரேயர்5:4 என்பது பரிசுத்தாவியானவரின் கட்டளையாகும்!

எனவே ஆபிரகாமுக்கு கொடுத்த நித்திய உடன்படிக்கையை மத்தியஸ்தராக இருக்கிற கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கையை தண்ணீரில் எடுக்கும் மூழ்குதல் ஞானஸ்நானம் மூலமாக நல்மனசாட்சியின் உடன்படிக்கையை நிறைவேற்றி தேவனுக்கும் மனுஷனுக்கும் மத்தியஸ்தராக இருக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோடும் ஒப்புரவாகிக்

கொண்டு, பரலோகத்தின் நித்திய சுதந்திரவாளியாகி அவ
உடைமைக்கு உரிமையாளராகி விடுகிறோம்! அவருடை
ஊழியங்களை இவ்வுலகத்தில் நிறைவேற்றி வருகிறோம்!

இப்படி இப்புதிய உடன்படிக்கையை நிறைவேற்றி
வர்களுக்கு கர்த்தர் கொடுக்கும் மகா மேன்மையா
வாக்குத்தத்தம் என்னவென்றால், ஒருவன் எனக்
ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன். நா
எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இரு
பான். ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்வதால் அவனை
பிதாவானவர் கனம் பண்ணுவார் (யோ12:26).

எனவே புதுசிருஷ்டியாக மாறினவர்களுக்கு அவருடை
ஊழியஞ் செய்கிறவர்களுக்கும் கிடைக்கும் பாக்கிய
என்னவென்றால், கர்த்தர் இயேசுவோடு நித்திய நித்தி
மாக ஜீவிப்பது பிதாவனவரின் கனப்படுத்தும் மேன்மையைப்
பெறுவதும் ஆகும்!

இப்படிப்பட்ட மகா மேன்மையை நீங்கள் பெறவேண்டு
மானால் மனந்திரும்பி பாவ ஜீவியத்தை விட்டு கர்த்தர்
இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தெளிப்
ஞானஸ்நானத்தையும் குழந்தை ஞாஸ்நானத்தையும்
புறம்பே தள்ளி மூழ்குதல் ஞானஸ்நானத்தை நீவீர் எடுத்துக்
கொள்வீரானால் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டு புதுசிருஷ்
டியாக மாறுவீர் (கலா 3:26,27) அப்படியல்லவென்று
மூழ்குதல் ஞானஸ்நானத்தை நீவீர் வெறுத்து தள்ளுவீரா
னால் கர்த்தர் வருகையில் நீவிர் புறம்பே தள்ளப்படுவீர்
(தீத்து 3:5 எசேக்கியேல் 16:9 யோ 3:3-5).

எனவே விருத்தசேதனமாகிய புதிய ஏற்பாட்டின் நல்
மனசாட்சியின் உடன்படிக்கையில் உனக்கு பங்குமில்லை
பாகமுமில்லை. கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்
பட்டிருக்கிறதாகக் காண்கிறேன் என்று பவுல் அப்போஸ்
தலன் கண்டிக்கிற மாய்மாலக்காரனாக மாறுவீர்.
(அப்போ 8:23). எனவே பாவத்தை அறிக்கை செய்துவிட்டு
விட சொல்லுகிறது வேதம் (நீதி 28:13) அநேகர்

பாவத்தை அறிக்கை செய்து அறிக்கையை விட்டு விட்டு பாவத்தை நோக்கி ஓடுகிறார்கள். அடுத்து வேதத்தில் விருத்தசேதனம் நீதிக்கு தேவ முத்திரையாக இருக்கின்றது என்பதை வாசிப்போம்.

மேலும் விருத்தசேதனம் இல்லாமலிருந்த காலத்தில் அவன் விசுவாசத்தினால் அடைந்த நீதிக்கு முத்திரையாக விருத்தசேதனமாகிய அடையாளத்தைப் பெற்றான். விருத்த சேதனமில்லாதவர்களாய் விசுவாசிக்கிற யாவருக்கும் நீதி எண்ணப்படும் பொருட்டாக அவர்களுக்கு அவன் தகப்பனாயிருக்கும்படிக்கும், விருத்தசேதனத்தைப் பெற்றவர்களாய் மாத்திரமல்ல, நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாம் விருத்த சேதனமில்லாத காலத்தில் அடைந்த விசுவாசமாகிய அடிச்சுவடுகளில் நடக்கிறவர்களாயுமிருக்கிறவர்களுக்குத் தகப்பனாயிருக்கும்படிக்கும் அந்த அடையாளத்தைப் பெற்றான் (ரோமர் 4:11, 12, 13).

மேலும் பவுல் எபேசியருக்கு எழுதின நிருபத்தில், நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்தாவியால் முத்திரைப் போடப்பட்டீர்கள் என்றும், அவருக்கு சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார் (எபேசியர் 1:13, 14) என வாசிக்கிறோம்!

எனவே பழைய ஏற்பாட்டில் விசுவாசத்தினால் விருத்தசேதனம் பண்ணப்பட்டது. புதிய ஏற்பாட்டில் நம் ஆண்டவர் புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தி அதன்மேல் விசுவாசிக்கிற யாவருக்கும் நீதியின் முத்திரையாகிய பரிசுத்தாவியின் அபிஷேகத்தைக் கொடுத்து நீதியின் முத்திரையாகிய பரிசுத்தாவியின் அபிஷேகத்தில் விருத்தசேதனத்தை புதிய ஏற்பாட்டில் விசுவாசிக்கிற பிள்ளைகளுக்கு நிறைவேற்றி விட்டார்.

எனவே தேவனுடைய ராஜ்யம் பேச்சிலல்ல, பெல திலே உண்டாயிருக்கிறது (1கொரி 4:20). இந்த பெல நமக்காக மரித்து, உயிர்த்தெழுந்த கர்த்தர் இயேசுவை சார்ந்து கொள்ளும்போதே கிடைக்கிறது என்பது வேத தின்மறுக்க முடியாத சான்ருகும். இந்த மகத்துவமான பரிசுத்தாவியின் முத்திரை நம்மை பரலோக ராஜ்யத்தி கொண்டுபோய் சேர்க்கும் (எபே 1:13 எபே 4:30 என்பது திண்ணம்!

இந்த பரிசுத்தாவியின் முத்திரையாகிய ஆவியின் நிறை வைக் குறித்து நீவிர் அறிய ஞானம் பிறக்கவில்லையாளுல், உன்னையும் புதுசிருஷ்டிக்கு தகுதிப்படுத்தமுடியாது மற்றவர் களையும் ஆயத்தப்படுத்த இயலவே இயலாது! மேலும் வேதத்தின் ஒரு பகுதியை வாசிப்போம்: கர்த்தர் அவனை நீ எருசலேம் நகரம் எங்கும் உருவப் போய், அதற்குள்ளே செய்யப்படுகிற சகல அருவருப்புகளினிமித்தமும் பெருமூச்சு விட்டழுகிற மனுஷரின் நெற்றிகளில் அடையாளம் போடு என்ருர்.

அடையாளம் போடப்பட்டிருக்கிற ஒருவனையும் கிட்டா திருங்கள் என்ற உத்திரவையும் கர்த்தர் பிறப்பிப்பதைப் பார்க்கின்ருேம்! எனவே மகா பயங்கரமான அழிவு இந்த உலகத்தைச் சந்திக்க வருகிறது. எனவே அந்த அழிவிலி ருந்து மீட்கப்படும்படியாக பரிசுத்தாவிக்குள்ளான முத்திரை யாகிய விருத்தசேதனம் உடையவர்களாக இருக்கவேண் டும் (எசேக்கியல் 9:4,6).

விருத்தசேதனம் புது சிருஷ்டியென்றும், மனந்திரும்புத லோடு ஞானஸ்நானம் ஒரு உடன்படிக்கையென்றும் பரிசுத் தாவிக்குள்ளான முத்திரையென்றும், வாசித்தோம்! மேற் கூறிய அனுபவங்களைப் பெற்றவர்கள் விருத்தசேதனம் பெற்ற ஆவிக்குரிய இஸ்ரவேலர்கள் என்று வேதம் தெள்ளன விளக்குகிறது. மாமிசத்தின்படியல்ல, ஆவியின்படியே நாம் பெற்றுக் கொள்ளுகிற விருத்தசேதனமே நம்முடைய பாவத் திலிருந்து விடுதலைப் பெறுவதற்கும், நம் சரீரம் மறுரூபமாகி இவ்வுலகத்தைவிட்டு பறந்து செல்லவும் ஆதாரமாக

...ளது என்பதை உணருகிறோம். மேலும் வேதத்தில்: நீங்... கிறிஸ்துவைப் பற்றும் விருத்தசேதனத்தினாலே மாம்சத்... ற்குரிய பாவ சரீரத்தைக் களைந்து விட்டதினால் கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள் என்றும் வேதம் தெளிவுப்படுத்துகிறது (கொலோ 2:11).

இப்படிப்பட்ட மறுபிறப்பு அடைந்த மனிதன் பழைய பெயரை மாற்றி புதிய பெயரை சூட்டி ஊழியத்தில் ஈடுபட வேதம் அனுமதிக்கிறது. தேவன் ஆபிராமை ஆபிரகாம் என்றும் சாராயை சாராள் என்றும் யாக்கோபை இஸ்ரவேல் என்றும் மாற்றி ஆசீர்வதிக்கிறார். ஓசேயா என்ற பெயரை யோசுவா என்றும் மாற்றப்பட்டிருக்கிறது (எண்ணாகமம் 13:6). புதிய ஏற்பாட்டிலும் சவுல், என்பவன் கிறிஸ்துவுக்குள் பவுலாகி ஊழியத்தை நிறைவேற்றி அவர் எழுதிய 14 நிருபங்களிலும் பவுல் என்ற பெயர் ஒளிவிட்டு மிளிர்கிறது.

எனவே தள்ளப்பட்ட தூதர்களின் பேர்களை வைத்து ஊழியம் செய்தால், அந்த பெயர் இருப்பதினால் அநேக இந்துக்கள், இயேசுவை ஏற்றுக் கொள்கிறார்கள் என்று பெருமை பேசவும், உன் பழைய பெயரினால்தான் ஆத்துமாக்கள் கிடைக்கிறது என்று வீம்பு பேசவும் ஏதுவாகிறது (யாக் 4:16). எனவே வேதத்தில் கர்த்தரை சார்ந்துள்ள பெயரை சூட்டி, ஊழியம் செய்யுங்கள். இம்மகிமையான பெயரை ஜீவபுஸ்தகத்தில் தேவதூதர்களால் வாசிக்கப்படும் போது, பரலோகமே சந்தோஷப்படும். ஞானத்தைப் பின்பற்றுங்கள். அல்லேலூயா!

---

6. நான் இருமுறை பிறந்தேன்!
(I Was Born Twice)

"புது சிருஷ்டி" என்ற இப்புத்தகத்தை வெளியிடுவதற்கு முன்னதாக, நான் இருமுறை பிறந்தேன் என்ற 'கைப்பிரதி

ஒன்று எனக்கு கிடைத்தது. மேல் நாட்டிலுள்ள சகோத
ஒருவர் தான் மறுபிறப்பு பிறந்ததை அனுபவ ரீதியில் எழு
யிருந்தார். அந்த கைப்பிரதியை நான் வாசித்த போ
மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன். கீழ்குறித்த அச் சாட்சி
வாசித்து பயனடையுங்கள்.

நான் முதல்முறை பிறந்த பொழுது குழந்தையா
என்றும் சாகாத ஆத்துமாவோடு இவ்வுலகத்திற்கு அறிவி
கப்பட்டேன். நான் 18 வயதான போது, இரண்டாம் மு
பிறந்து, மற்றொரு உலகத்திற்கு அறிவிக்கப்பட்டேன்
இந்த இரண்டாவது பிறப்பு அல்லது ஆவியின் பிறப்
அற்புதமானதும் ஆச்சரியமான ஓர் அனுபவமாயிரு
தது. அது என் முழு ஜீவியத்தையும் மாற்றி எ
ஆத்துமாவை இரட்சித்தது. இது முதல் பிறப்பைப் போன்
தாக இல்லாமல் மாறுபட்டதும், அதோடு ஏதோ சேர்க்க
பட்டதாயும் இருந்தது. உண்மையான ஒரு வாழ்க்
அங்கேயே அப்பொழுதே ஆரம்பித்தாற் போல் எனக்கு
தோன்றிற்று.

ஆம்! இதை வாசிக்கிற நீயும் மறுபடியும் பிறந்த ஒ
வொரு விசுவாசியும் சந்தோஷத்தையும் சமாதானத்தையும்
வெற்றியையும் அனுபவித்துத்தெரிந்து கொள்ள இது எப்படி
உண்டானதென்று நான் உனக்குச் சொல்ல விரும்புகின்
றேன். அமெரிக்காவிலுள்ள ஒக்லாஹாமா என்னும்
மகாணத்திலுள்ள ஒரு சிறு சபையில் நான் வாழ்ந்து
வந்தேன். அங்கு சில ஆலயங்களில் நடைபெற்ற உயிர்மீட்சி
கூட்டங்களுக்கு போக ஆரம்பித்தேன். ஒவ்வொரு இரவும்
தேவ வசனம் பிரசங்கிக்கப்படுவதை நான் கேட்டபோது,
என்பாவங்கள் அநேகம் என்றும் எனக்கு ஓர் இரட்சகர்
தேவை என்பதையும் நான் உணர்ந்தேன்!

எல்லாரும் பாவஞ் செய்து தேவ மகிமையற்றவர்களாகி
(ரோமர் 3:23) விட்டார்கள் என்றும் அறிந்து கொண்டேன்.
நான் இவைகளைப் பற்றி ஏதாவது செய்யாவிட்டால், நான்

...விடப்பட்டு நியாயத்தீர்ப்பு நாளன்று தேவ சமூகத்தை ...டு அப்புறப்படுத்தப்பட்டவனாக எரிந்து கொண்டிருக்கும் ...னிக் கடலில் தள்ளப்பட்டு சதாகாலத்திலும் என்னு ...ய பாவங்களுக்காகத் தண்டனை அனுபவிக்க வேண்டு ...ன்று அறிந்தேன். ''அப்பொழுது அவர் சபிக்கப்பட்ட ...ர்களே என்னை விட்டு பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக் ...கவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினி ...லே போங்கள்" (மத் 25:41) என்று சொல்லுவார்.

நான் இதை உணர்ந்த போது கர்த்தர் என்னை மன்னித்து ...ந்த பயங்கரமான தண்டனையிலிருந்து, என்னைக் காப் ...ற்ற வேண்டுமென்று நான் மிகவும் ஊக்கமாக ஜெபித் ...தேன். அதன் பிறகு நம்முடைய பாவங்களை நாம் அறிக்கை ...ட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத் ...தயும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் ...யும் உள்ளவராய் இருக்கிறார் (யோவான் 1:9) என்று ...ர்த்தர் தம் வசனத்தில் சொல்லியிருப்பதை எனக்குக் காண் ...த்தார்! நீங்கள் உங்கள்... குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிடுங்கள் (யாக் 5:16) ''தன் பாவங்களை மறைக் ...றவன் வாழ்வடையமாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனே இரக்கம் பெறுவான்" (நீதிமொழி ... 28:13). என்னும் இந்த சத்தியங்களை நான் ...குணர்ந்த போது என் பாவங்களை ஒவ்வொன்றாக என் ...னதில் வந்தன. நான் அவைகளை அறிக்கையிட ஆரம்பித்தேன்.

ஒரு மாலையில் நான் ஒரு தனித்த ஜெபஸ்தலத்திலிருந்து ...ந்து கொண்டிருக்கும்போது என்னில் நான் திருந்த ...வண்டிய ஒரு காரியம் இன்னும் ஒன்று இருக்கிறதென்றும் ...தை நான் திருத்தவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார் ...ன்றும் தெரிந்து கொண்டேன்! இது எனக்கு மிகவும் கடின ...க இருந்தது. ஆனால் கர்த்தர் என்னிடம், கேட்டதெல்லாம் செய்து என்னுடைய சுய சித்தத்தை அவருடைய தெய்வீக சித்தத்திற்கு பூரணமாய் ஒப்புக்கொடுக்க விரும்பினார். ...ரட்சிப்பு இலவசமாக நமக்கு கொடுக்கப்படும் ஓர் ஈவு என்

றும் தெய்வீக அன்பளிப்பு என்றும் பரிசு என்றும் அது நம கிரியைகளினால் நாம் சம்பாதிக்கும் ஒரு காரியமல்ல என் தும் உண்மை.

தேவனுடைய சித்தத்திற்குப் பூரணமாகத் தம் ஒப்புக்கொடுப்பவனுக்குத் தான் அந்த தெய்வீக இரட்சி இலவச அன்பளிப்பாக தேவனால் கொடுக்கப்படும்! என் டைய இருதயமும் நினைவும் எல்லா உலக மாமிச விருப்ப களிலிருந்து பூரணமாய் கழுவப்பட்ட பிறகு தான் இயே எனக்குள் வந்து என் இருதயத்தை சமாதானத்தாலு அன்பாலும் நிரப்ப என்னோடு தங்குவார்.

கர்த்தர் எனக்கு முன் வைத்த இந்த கடமையைப் பற் நான் நினைத்துக்கொண்டு இருக்கும்போது என்னுடை குற்றத்தை செம்மைப்படுத்த எந்த ஆளை நான் சந்தித்து எ குற்றத்தைச் செம்மைப்படுத்த வேண்டுமென்று ஆண்டவ விரும்பினாரோ அதே ஆளை நான் சந்தித்தேன். நான் உடனே என் குற்றத்தை அறிக்கையிட்டேன். இந்தக் கீழ்படிதலினா என் இருதயத்தில் உண்டான ஆச்சரியமான மாறுதல் என்னால் ஒருபோதும் மறக்க முடியாது. ஒரு வினாடி நான ஒன்றும் அறியாமல் திகைத்து நின்றேன். அப்பொழுது என் முன் இரண்டு பெரிய கதவுகள் தெரிந்தன. நான் அவைகளை அணுகினபோது, அவைகள் திறந்தன. நான் சுத்தமான இருதயத்துடன் ஒரு புதிய ஜீவியத்தில் நுழைந்தேன். இ கதவும் மற்றொரு உலகத்திற்கு வழியாக இருந்தன.

தேவனுடைய சுதந்தரமும் கிறிஸ்துவுக்குள் உடன் சுதந்தரருமாகியவர்கள் இருக்கும் பரலோக ராஜ்யம் (ரோமர் 8:17). அவைகள் புது சந்தர்ப்பங்களுக்கும் புது சேவை செய்ய புதிய இடங்களுக்கும் வழி திறந்தன. நான் நடந்து போனபோது, என்னுடைய விருப்பங்களிலும் என்னுடைய நம்பிக்கைகளிலும், நான் ஒரு மாறுதலை உணர்ந்தேன். நான் அதே ஆள் தான். ஆனால் நான் புதிய ஆளாக இருந்தேன். இதோ, "எல்லாம் புதிதாயின" (II கொரி 5:17). நான் மறுபடியும் பிறந்தேன். நான்

றுமையாக அப்படி நினைக்கவில்லை! நம்பவில்லை. நான்
ப்படியிருப்பதாகவே அறிந்தேன். என் ஆத்துமாவை
ப்பின அன்பு சந்தோஷம் சமாதானங்களினால் என்
ருதயம் பூரித்தது.

அன்பார்ந்த சகோதரனே, சகோதரியே! இவ்வித
கவே நான் இரண்டாவது முறை பிறந்தேன். நான்
யேசுவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டதும்
வர் என்னைத் தனது புத்திரனாக ஏற்றுக் கொண்டதும்
க்கு தான். அவர் என் எல்லாப் பாவங்களையும் மன்னித்து
ன்னைப் பாவ ஜீவியத்திலிருந்தும் நித்திய நரகத்தினின்றும்
ட்டு சேவைக்கும் மனச்சமாதானத்துக்கும் நித்திய
ந்தோஷத்திற்கும் வழி நடத்தினார். அவர் குடும்பத்தில்
ான் பிறந்ததிலிருந்து அவர் எனக்குச் செய்த ஆச்சரியமான
ரியங்கள் எல்லாவற்றையும் சொல்ல என்னால் இயலாது.

அந்த முத்து கதவுக்குள் நுழைய வேண்டும் என்று
சைப்படுகிறவர்களுக்கு மறுபடியும் பிறப்பது ஒரு கட்டாய
கும். ஒருவன் ஆவியினால் மறுபடியும் பிறவாவிட்டால்
ிசுத்த தேவனின் நியாயத்தீர்ப்பை கடந்து போக முடி
து. மாமிசத்தினால் பிறப்பது மாமிசமாயிருக்கும். ஆவி
னால் பிறப்பது ஆவியாயிருக்கும்! ஒருவன் மறுபடியும்
றவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்
ான் என்றும் நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று
னக்கு சொன்னதைக் குறித்து அதிசயப்பட வேண்டாம்
ன்று இயேசு சொன்னார் (யோ 3:37).

எனது நண்பனே! நீ மறுபடியும் பிறந்திருக்கிறாயா?
வைகள் எல்லாம் எப்படி நடக்கும் என்று கேட்கிறாயா?
ருவன் தானே மறுபடியும் பிறக்கும் வரை. இந்தப் புதுப்
றப்பின் இரகசியத்தை தெரிந்து கொள்ள முடியாது.
ன்னுடைய பாவங்களை இரட்சகராகிய இயேசு கிறிஸ்து
ன்னிக்காவிட்டால் நீ கைவிடப்படுவாய் என்பதை உணரும்
லைக்கு வந்திருக்கிறாயா? நீ இனி வரும் வாழ்க்கையில்
ல்லாமல், இந்த வாழ்க்கையில் உன் பாவங்களை விட்டுத்

திரும்ப நீ எப்பொழுதாவது தீர்மானம் செய்திருக்கிறாயா? உன்னைக் கர்த்தர் மன்னித்து அவருடைய இரத்தத்தால் உன் பாவங்களைக்கழுவி உன்னை மன்னிக்க நீ எப்பொழுதாவது முழங்காலில் நின்று அவரைக் கேட்டிருக்கிறாயா? அப்படி இல்லாவிட்டால் ஏன் இன்றே இந்த மன்னிப்பை நீ தேடக்கூடாது. என்னுடைய மாதிரியே உன் அனுபவம் இல்லாமலிருக்கலாம். ஆனால் உன்னைக் கர்த்தர் எங்கும் எப்பொழுதும் மன்னிக்கிறார் என்பதை நிச்சயமாய் அறிந்துகொள். ஏனெனில் குமாரனாகிய இயேசு உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள் (யோ 8:36). உடனே இயேசுவை ஏற்றுக்கொள்.

---

7. மறுபிறப்பைப் பற்றி இயேசுவும் நிக்கொதேமுவும்!

யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான் (யோ 3:1). அவன் இராக்காலத்தில் இயேசுவினிடத்தில் வந்து: ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்று இயேசுவை புகழ்ந்து கொண்டிருந்தான்! இங்கே பரிசேயர்கள் என்று சொல்லும்போது தேவனிடத்தில் பக்தி வைராக்கியம் கொண்டவர்களும் கர்த்தர் இயேசுவை எப்பொழுதும் எதிர்த்தவர்களாகும். உயிர்த்தெழுதல் உண்டென்றும் தேவதூதனும் ஆவியும் உண்டென்றும் சொல்லுகிறவர்கள் (அப் 23:8) இவர்களே!

அப்படிப்பட்ட கொள்கையும் தேவனிடத்தில் பக்தி வைராக்கியமும் கொண்ட பரிசேயர்களின் ஒருவனாகிய நிக்கொதேமு என்ற பரிசேயன், இராக்காலங்களில் இயேசுவைக் காணும்படியாகவந்து இயேசுவைக் கண்டு அவர் செய்த அற்புதங்களைச் சொல்லி, இயேசுவை ஒரு சாதாரண மனிதன் என்றும் தேவன் தான் அவரோடு இருந்து அற்புதம்

செய்வதாகவும் பேசி, அவரைப் புகழ்ந்து கொண்டிருந்தான்! தேவன்தான் இயேசுவை அனுப்பினார் என்பது அவன் அறிவுக்கு எட்டாத ஒன்றாக இருந்தது. ஆனால் உயிர்த்தெழுதலில் நம்பிக்கை வைத்துக் கொண்டிருந்த அவனுக்கு புரியவைக்கும்படியாக உயிர்த்தெழுதலுக்கு காரணகர்த்தா யார் என்பதையும், தேவனுடைய ராஜ்ஜியத்திற்கு பங்கடையும்படியாக என்ன செய்ய வேண்டும் என்பதையும் மிகத் தெளிவாக விளக்கும்படியாக இயேசு, இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் மறுபடியும் பிறக்க வேண்டும் என்பதைக் குறித்து நிக்கொதேமுவோடு பேசினார்.

இந்த மறுபிறத்தலின் சம்பாஷணையை யோவான் சுவிசேஷத்தில் 3 ஆம் அதிகாரம் முதல் வசனம் முதல் 21-ம் வசனம் வரை வாசித்தால் அறிந்து கொள்ளலாம்! கர்த்தர் இயேசு மறுபிறப்பைப் குறித்து பேசும்போது, மறுபடியும் பிறத்தலில் உள்ள இரண்டு அனுபவங்களில் தேவனுடைய ராஜ்ஜியத்தை காணுதலைக் குறித்தும் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசித்தலைக் குறித்தும் மிகத் தெளிவாக அவனுக்கு விளக்கிக் காண்பித்தார் (யோ 3:3-5).

ஆரம்பத்தில் நிக்கொதேமுவிடம் கர்த்தர் இயேசு பேசும் போது, ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்ஜியத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்! அதற்கு நிக்கொதேமு, "ஒரு மனுஷன் முதிர் வயதாயிருக்கையில் எப்படிப்பிறப்பான்! அவன் தன் தாயின் வயிற்றில் இரண்டாம் தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்றான்?"

இயேசு சொன்ன மேற்சொன்ன மறுபிறப்பின் தன்மையை இஸ்ரவேலின் போதகனாகிய நிக்கொதேமு விளங்கிக் கொள்ள முடியவில்லை என்பதை அவன் வார்த்தைகளே ஈண்டு விளக்கிக் காட்டுகிறது! இன்றும் இப்படிப்பட்ட நிக்கொதேமுக்கள் கிருபையின் காலத்தில் அறியாமல் தவித்து தங்களையும் மறுப்பிறப்பின் அனுபவத்தில் கொண்டு

வர முடியாமல், தங்களைச் சார்ந்துள்ள விசுவாசிகளையும் கிறிஸ்துவின் மறுபிறப்பின் போதனையில் வழி நடத்த முடியாமல் நிக்கொதேமுக்களாக வாழ்ந்து ஆவிக்குரிய வளர்ச்சியில்லாமல் திணறிக் கொண்டிருக்கின்றனர் என்பதை நாம் அறிவோம். பரிசுத்தாவியானவர் தாமே அவர்கள் மனக் கண்களை திறந்தருள்வாராக!

ஆயினும் இயேசுவின் போதனைக்கு நிக்கொதேமு செவி கொடுத்துக் கீழ்ப்படிந்து மறுபிறப்படைந்து, இயேசுவுக்கு சாட்சியானன்! இதை பின் வரும் நிகழ்ச்சிகளின் மூலம் தெளிவாக அறிந்து கொள்ளலாம். எனவே, நிக்கொதேமுவைப் போன்ற அன்பார்ந்த கிறிஸ்தவர்களே, இயேசுவின் வருகை சீக்கிரம் உள்ளதே, நீங்கள் இயேசுவின் மூலம் மறுபிறப்படைந்து, தேவனுடைய ராஜ்ஜியத்தைக் காணும் சிலாக்கியத்தைப் பெற்று, அதில் பிரவேசிக்கும் பாக்கியத்தைப் பெற்றுக் கொள்வீர்களாக!

முதலாவது, தேவனுடைய பிள்ளைகள் மறுபிறப்பின் தன்மையை அறிந்து, மறுபிறப்பின் மேன்மையை உணர்ந்து, மறுபிறப்பின் அனுபவங்களை விளங்கிக் கொள்ளாவிட்டால் மறுபிறப்பு அடைய முடியாது என்பது உறுதி! ஆகவே மறுபிறப்பின் அனுபவத்தை ஒரு விசுவாசி அறியவில்லையென்றால் கிறிஸ்துவின் உபதேசத்தை அறிந்து கொள்ளவும், அந்த உபதேசத்தில் தேர்ச்சி அடையவும், நிலைத்துநிற்கவும் இயலாது. எனவே அனைத்துக் கிறிஸ்தவர்களே, ஆண்டவராகிய இயேசு சொன்ன மறுபிறப்பைக் குறித்து அதாவது தேவனால் பிறக்கும் பிறப்பைக் குறித்து அறிந்து கொள்ளவேண்டுமென்றால், முதலாவது மனுஷீக பிறப்பின் சுத்திகரிப்பை அறிந்து கொண்டால் ஆவிக்குரிய பிறப்பு என்ன என்பது தெள்ளன விளங்கும்!

ஒரு மனிதன் தாயின் வயிற்றில் பிறக்கும்போது, அக்குழந்தையின் ஆவி ஆத்துமா ஆதாம் ஏவாளின் பாவத்தினால் மரித்துகிடக்கிறது என்பதாகும். அப்படிப்பட்ட குழந்தை வளர்ந்து பெரியவனாகும்போதும் கூட ஜீவனுள்ள

தேவனைத் தேடாமல் மரணப்பாதையை நோக்கி ஓடுகிறான். உலகம் அவனை இழுக்கிறது. இவ்வித சூழ்நிலையில் தேவனின் ஆவி அவனை சந்தித்து அவனைத் தான் ''ஒரு பாவி '' என உணரச் செய்து கிறிஸ்துவண்டை வருகிறபோது, இயேசு அவனை மாற்றி தம் ஆவியினால் அவனுடைய ஆவியை உயிர்ப்பிக்கச் செய்து தம் பரலோக பாதையில் நடத்துவதே மறு பிறப்பு என்ப தாகும்! தேவ ஆவி மனித ஆவியில் இரண்டறக் கலந்து வாசம் பண்ணுவதே மறுபிறப்பாகும்! இது பரலோக அரசாங்க பணியாளன் என்பதை நிரூபிக்கிறது. இவ்வித மறுபிறப்பும் சுத்திகரிப்பும் எவ்வாறு ஒரு மனிதனில் நிறை வேறுகிறது என்று ஆராய்வோமாக!

வேதத்தில், எசேக்கியல் பதினாறும் அதிகாரம் 3-ஆம் வாக்கியத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் மறுபிறப்பு பிறக்க வில்லையென்பதை சரீரத்தின் பிறப்போடு தேவ ஆவியான வர் கூறுகிறதை வாசித்து அறிந்து கொள்வோம்! உன் பிறப்பின் வர்த்தமானம் என்ன வென்றால்,

1. நீ பிறந்த நாளில் உன் தொப்புள் அறுக்கப்படவில்லை,
2. சுத்தமாவதற்கு தண்ணீரால் குளிப்பாட்டப்படவுமில்லை,
3. நீ உப்பால் சுத்திகரிக்கப்படவுமில்லை,
4. நீ துணிகளால் சுத்திகரிக்கப்படவுமில்லை, என்று

இஸ்ரவேல் ஜனங்கள் பாவத்தில் மூழ்கி மறுபிறப்பு அடையாமல் இருக்கிறார்கள் என்பதை பரிசுத்தாவியானவர் தெள்ளென விளக்கிக் காட்டுகிறார்!

எனவே, சரீர பிறத்தலின் சுத்திகரிப்பின் அனுபவம் இயேசுவண்டை வந்து இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொள்ளும் ஒவ்வொரு மனிதனுக்கும் ஆவி ஆத்துமாவில் ஆவிக்குரிய சுத்திகரிப்பை பெற்றுக்கொள்ளும் அனுபவத்திற்கு ஒப்பிட்டு விளக்குகிறதாயிருக்கிறது. மண்ணான இச் சரீரத்தில் ஆவி ஆத்துமா ஜீவிக்கும்போதே இம்மறுபிறப்பின் அனுபவத்தையும் அதைத் தொடர்ந்து சுத்திகரிப்பையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று வேதம் தெள்ளென வலியுறுத்திக் கூறுகிறது. எனவே சரீர பிறப்பின் சுத்திகரிப்

போடே ஆவிக்குரிய சுத்திகரிப்பை ஒப்பிட்டு ஆராய்ந்து தெளிவடைவோம்!

8. சரீரபிறப்பில் சுத்திகரிக்கப்படும் நிபந்தனைகளும் மறுபிறப்பில் சுத்திகரிக்கப் படும் நிபந்தனைகளும்!

ஒரு குழந்தை பிறந்தவுடன், முதலாவது தொப்புள் அறுக்கப்படவேண்டும், இரண்டாவது தண்ணீரால் குளிப் பாட்டப்படவேண்டும், மூன்றாவது உப்பால் சுத்திக்கப்படுதல் வேண்டும். நான்காவது துணிகளால் சுற்றப்படவேண்டும்.

முதலாவது, தொப்புல் அறுக்கப்பட்டால்தான் தாயும் குழந்தையும் பிரித்தெடுக்கமுடியும். இரண்டாவது, சுத்தமான தண்ணீரில் குளிப்பாட்டினல் தான் குழந்தை சுத்தமாக முடியும். மூன்றாவது, உப்புக்கலந்த கலவையை குழந்தைக்கு கொடுத்து அதன் வயிற்றிலுள்ள விஷ நீர்களை வயிற்றிலிருந் தும் குடல்களிருந்தும் வெளியே எடுத்து, குழந்தையின் வாய் தொண்டை வயிறு குடல்கள் சுத்தப்படுத்தப்படுகிறது. இவ் வித சுத்திகரிப்பு சரீரத்தில் பிறக்கும் குழந்தையின் சரீர வளர்ச்சிக்கு மிகமிக இன்றியமையாததாயிருக்கிறது. நான் காவது, குழந்தையின் சரீரம் காற்றிலும், விஷ கிருமிகளினு லும் தூசிகளினுலும் பழுது ஏற்படாதபடி மெல்லிய சுத்த மான துணிகளில் சுற்றி, பாதுகாத்தல் வேண்டும்.

இவ்வித நான்கு நிபந்தனைகளே சரீரத்தில் பிறக்கும் குழந் தையின் சுத்திகரித்தலின் மாருத நிபந்தனைகளாகும். இவ்வித நிபந்தனைகளை கிறிஸ்துவின் மறுபிறப்பில் பிறந்த மனிதனுக்கும் ஒப்பிட்டுப் பார்த்து அறிந்து கொள்வோம்.

A. மறுபிறப்பில் தொப்புள் அறுக்கப்படுதல்:-

பிறந்த குழந்தையின் தொப்புள் அறுக்கப்படுவது போல, கிறிஸ்துவில் மறுபிறப்பு பிறக்கின்ற மனிதனுக்கும்

தொப்புள் அறுக்கப்படவேண்டும். ஒரு பாவியான மனிதன் கிறிஸ்துவினிடத்தில் சேர்க்கப்படுவதற்கு முன்னதாக அவன் பாவ உலகத்திலிருந்து வேறு பிரிக்கப்படவேண்டும்! வேறு பிரிக்கப்பட அவன் தன் பாவங்களை இயேசுவுக்கு முன்பாக அறிக்கையிட்டு விட்டு, மனந்திரும்பி இயேசுவுக்குள் வர வேண்டும்.

இதுவே அவனுடைய உலக ஜீவியத்திலிருந்த இணைப்பாகிய தொப்புள் அறுக்கப்படுவதாகும்! இந்த வேலையை பரிசுத்த ஆவியானவரே செய்கிறார். ஒரு மனுஷன் தன்னை மனப்பூர்வமாக ஒப்புக்கொடுத்து கர்த்தரின் சுத்திகரிப்பை ஏற்றுக் கொள்ள வேண்டியது மிக மிக அவசியமாகிறது. ஆகவேதான், தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான் அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனே இரக்கம் பெறுவான் என்று சொல்லப்பட்டிருக்கிறது (நீதி 28:13). இப்பொழுது பிசாசானவன் இணைப்பிலிருந்து விடுபட்டு கிறிஸ்துவின் பரிசுத்த ஜீவியத்தில் இணைக்கப்படுகிறான். இப்பொழுது இயேசுவினிடத்தில் இணைக்கப்பட்டு விட்டான் என்பதாகும்.

B. மறுபிறப்பில் தண்ணீரில் குளிப்பாட்டுதல்:-

இரண்டாவது சரீரத்தில் பிறந்த குழந்தையை இரத்த கறைகளையும் நீங்கும்படி சுத்தமான வெது வெதுப்பான தண்ணீரில் கழுவி அசுசி நீங்கும்படியாக சுத்திகரிக்கப்படுவது போல மறுபிறப்பில் பிறந்த ஒரு மனிதனின் பாவமாகிய தொப்புள் இணைப்பை துண்டித்த பிறகு அவனை இயேசுவின் பரிசுத்த இரத்தத்தால் அவனின் ஜென்ம சுபாவமாகிய பொல்லாத சிந்தனைகளும், விபச்சாரங்களும், வேசித்தனங் களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும் துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வண்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும், கர்ம

பாவமாகிய விக்கிரகாராதனை, பில்லி சூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுக்கள் (கலா 5:19) முதலானவைகளை கழுவி சுத்திகரித்து ஜீவ வசனங்களால் அவனைப் புடமிட்டு பரிசுத்தாவியானவர் பாவமன்னிப்பின் நிச்சயத்தை அவனுக்குக் கொடுத்து அவனை உற்சாகமடையச் செய்கிறார்!

அதன் பின்பு அவர்கள் பாவங்களையும் அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார் (எபிரேயர் 10:17). ஆகவேதான் வேதத்தில் இயேசுவின் இரத்தம் சகலபாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது (I யோ 1:8,9). மேலும் குமாரனாகிய அவருடைய இரத்தத்தினால் பாவமன்னிப்பாகிய ஆத்தும மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது (I கொரி 1:4) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினால் சமீபமானீர்கள் (எபேசியர் 2:13) என்றும் குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்கப்பட்டிருக்கிறீர்களென்று அறிந்திருக்கின்றீர்களே (I பேது 1:19) என்று ஆவியானவர் ஆறுதலும் தேறுதலும் வேதத்தில் அளிக்கிறார்.

C. மறுபிறப்பில் உப்பால் சுத்திகரிக்கப்படுதல்:-

மூன்றாவது சரீரத்தில் பிறந்த குழந்தைக்கு உப்புக் கலவையைக் கொடுத்து அதன் வயிற்றிலுள்ள விஷநீர்கள் வயிற்றிலிருந்தும் குடல்களிலிருந்தும் வெளியே எடுத்து குழந்தை வாய் தொண்டை வயிறு குடல்கள் இவற்றை சுத்தப்படுவது போல, மறுபிறப்பின் மூலம் கிறிஸ்துவண்டை வருகிற மனிதனின் இருதயம் மாம்ச இச்சையினாலும், கண்

களின் இச்சையினாலும், ஜீவனத்தின் பெருமையினாலு
(I யோ 5:16,17) அவனவன் தன் இருதயம் கறைப்பட்டுப்
போகாதபடி பரிசுத்தாவியானவர் மேலும் மேலும்
கழுவி சுத்திகரித்துக் கொண்டே வருகிறார் (II தெச 2:13).
இதனால் அவன் ஆவி ஆத்துமா சரீரம் பரிசுத்தமடைகிறது.
கிறிஸ்துவின் இரத்தம் அவனில் ஓட ஆரம்பிக்கின்றது.
மேலும் புறஜாதியாராகிய பலி பரிசுத்தாவியானவராலே
பரிசுத்தமாக்கப்பட்டு தேவனுக்கு பிரியமான பலியாகும்
படிக்கு மேன்மை பாராட்ட எனக்கு இடமுண்டு என்று பவுல்
சொல்லுகிறார் (ரோமர் 15:15,17).

எனவே மனந்திரும்பி கிறிஸ்துவண்டை வருகிற
மனிதனை இவ்வுலகத்தின் ஆசை இச்சைகள் விநாடிதோறும்
கறைப்படுத்தி வருமாதலால் ஒவ்வொரு விநாடியும் பரிசுத்
தாவியானவரின் வசனமாகிய உப்பால் சுத்திகரிக்கப்பட்டு,
அவைகளை வெளியேற்றிக் கொண்டேயிருந்து ஆவி, ஆத்துமா
சரீரத்தைக் கர்த்தர் பாதுகாக்கிறார். இப்பொழுது சுத்த மன
சாட்சி உடையவனாக மனிதன் மாற்றப்படுகிறான்! எனவே
மறுபடியும் பிறந்த மனிதனுக்கு, கொடுக்கும் புத்திமதி
யென்னவெனில் சகல துர்க்குணத்தையும் சகலவித கபடத்
தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும் சகலவித
புறங்கூறுதலையும் ஒழித்து விட்டு, நீங்கள் வளரும்படி,
புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல திருவசனமாகிய
களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்
என்று மறுபிறப்பு பிறந்த ஆவியின் குழந்தையாகிய மனித
னுக்கு ஆவியானவர் அறிவுரை கூறுகிறார் (I பேதுரு 2:1-3).
மேலும் வேதத்தில் வாலிபன் தன் வழியை எதனால் சுத்தம்
பண்ணுவான்? உமது வசனத்தின் படி தன்னைக் காத்துக்
கொள்கிறதினால் தானே என்று ஆவியானவர் அருளியிருக்
கின்றார் (சங் 119:9).

மேலும் வேதத்தில்: எனவே அழிவுள்ள வித்தினாலே
அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான
தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும்
ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே (I பேதுரு 1:23) என்று

சொல்லப்பட்டிருக்கிறது. எனவே அன்பார்ந்த கிறிஸ்தவர்களே, நீங்கள் ஜீவனுள்ள வசனத்தின் உப்பால் சுத்திகரிக்கப்பட்டு மறுபடியும் பிறந்திருக்கிறீர்களா? இல்லையென்றால் ஆயத்தமாகுங்கள்!

D. பிறந்த குழந்தை துணிகளால் சுற்றப்படுதலும் மறுபிறப்பில் விசுவாசி வஸ்திரங்களால் சுற்றப்படுதலும்:-

பிறந்த குழந்தை சுத்தமான மெல்லிய துணிகளால் சுற்றப்பட்டு உலகத்தின் கால நிலைகளாலும், சுற்றுப்புற சூழ்நிலையின் விஷக்கிருமிகளாலும் காப்பற்றப்படுவது போன்று கிறிஸ்துவண்டை வழி நடத்தப்படுகின்ற மறுபிறப்படைந்த விசுவாசி பலவித போதனைகளாகிய இயேசுவின் இரகசிய வருகை இல்லையென்றும், இயேசு வரமாட்டார் என்றும், பரிசுத்தாவியின் அபிஷேகம் பொய் என்றும், அந்நிய பாஷைகள் பொய் என்றும், வரங்கள் அப்போஸ்தலர் காலத்திலேயே ஒழிந்து விட்டது என்றும், ஆயிர வருட அரசாட்சி பூமியில் இல்லையென்றும், இயேசு வந்து விட்டார் என்றும் இப்படிப்பட்ட மோசம் போக்கும் போதனைகள், இயேசுவண்டை வந்து மறுபிறப்பின் தன்மையில் வளர்ந்து வருகிற மனிதனை வீழ்த்தி விடாதபடி இரட்சிப்பின் வஸ்திரம் விசுவாசியை பாதுகாக்கிறது. அல்லேலூயா!

அதனால் தான் வேதத்தில் தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான் என்றும் அறிந்திருக்கின்றோம். தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான். பொல்லாங்கன் அவனைத் தொடான் (I யோவான் 5:18) என்று வலியுறுத்தி வேதம் கூறுகிறது. தாயின் வயிற்றிலிருந்து பிறந்த குழந்தை தொப்புள் அறுக்கப்பட்டு தண்ணீரால் குளிப்பாட்டி உப்பால் சுத்திகரிக்கப்பட்டு துணிகளால் எப்படி சுற்றப்படுகிறதோ அவ்விதமாகவே கிறிஸ்துவண்டை வருகிற மனிதன் தன் பாவ அறிக்கையினால் மனந்திரும்பி இயேசுவைத் தன் சொந்த தெய்வமாக ஏற்றுக் கொண்டு இயேசுவின் இரத்தத்

திஞல் பாவம் நீங்க சுத்திகரிக்கப்பட்டு, வசனத்திஞல் நிரம்பி பரிசுத்தாவியானவரால் தொடர்ந்து சுத்திகரிக்கப் படுபவஞகவும் நீதியின் வஸ்திரத்தை உடுத்திக்கொண்டவஞ கவும் (வெளி 19:8) வரும்பொழுதுதான் நீதியை எதிர் நோக்கி அவன் உண்மையான மறுபிறப்பை அடைந்தவஞக ஜீவிக்க முடியும். அப்பொழுது மட்டுமே அவன் பாவம் செய்ய இயலாது. ஏனென்றுல் தேவனின் வித்தாகிய ஜீவனுள்ள வசனம் அவனில் தரித்திருந்து பாவம் செய்யக்கூடாதபடி விசுவாசியைக் கண்டித்து உணர்த்தி இயேசுவின் அடிச்சுவட் டில் நடக்க வைக்கிறது.

எனவே வேதத்தில் தேவஞல் பிறந்த எவனும் பாவம் செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித் திருக்கிறது அவன் தேவஞல் பிறந்த படியிஞல் பாவம் செய்ய மாட்டான் (I யோ 3:9) என்று சொல்லப்பட்டிருப்ப தால் வசனத்தில் உறுதியாயிருந்து இரட்சிப்பின் வஸ்தி ரத்தை இழந்து போகாதபடி பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இது ஒவ்வொரு விசுவாசியும் கவனிக்க வேண்டி யது அவசியம். அப்பொழுதுதான் இயேசு சிறுபிள்ளேகளே கைகளில் ஏந்தி ஆசீர்வதித்தது போல கிறிஸ்துவண்டை வருகிற மனிதனே ஆசீர்வதிக்க முடியும். இப்பொழுது அவன் கள்ளம், கபடு, பெருமை, இல்லாத சிறுபிள்ளே போன்று மாறுகிருன். தேவனுடைய ராஜ்யத்திற்கு தகுதியாகிருன் (மத்தேயு 18:1-4).

பின்பு இயேசு அவனே ஆசீர்வதித்து பரிசுத்தாவியா ன வரிடம் ஒப்படைத்து, ஆவியானவர் தம் விருப்பப்படி அவனே நடத்தி அவனுக்கு ஒரு பரலோக ராஜ்யம் உண்டு என்று வெளிப்படுத்தி, ஆவிக்குரிய சபையில் சேர்க்கின்ருர். மறுபிறப்படைந்த குழந்தைபோன்ற விசுவாசியாகிய அவன் கர்த்தரின் பிள்ளேகளாகிய விசுவாசிகள் சபை கூடி வருதலே யும், அவர்களின் ஐக்கியத்தையும் ஒழுங்கையும், ஜெபங்களே யும், பாடும் பாடல்களேயும், ஸ்தோத்திர த்துதிகளேயும், விண் ணப்பங்களேயும், சங்கீதங்களேயும், சாட்சிகளேயும், செய்தி களேயும் கண்டும் கேட்டும், தேவபிரசன்னத்திஞல் நிறைந்து

தன் ஆவி ஆத்துமா சந்தோஷம் சமாதானம் அடைகிறதை எண்ணியெண்ணி மெய்யாகவே தனக்கு ஒரு நீதியின் ராஜ்யம் உண்டு என்று காண்கிறான். அல்லேலூயா!

இதில் பிரதானமான நிகழ்ச்சி என்னவென்றால், மனித ஆவியோடு கிறிஸ்துவின் ஆவி இணைந்து விடுகிறபடியால் நித்திய மகிழ்ச்சி மறுபிறப்பு அடைந்த மனிதனுக்கு கிடைத்துவிடுகிறது! கர்த்தருக்கு ஸ்தோத்திரம். எனவே மறுபிறப்பு அடைந்த விசுவாசி, ஆவிக்குரிய வளர்ச்சியில் வளர வாஞ்சித்து ஓடுகிறான். ஒரு மறுபிறப்பு அடைந்த விசுவாசி அனுபவிக்கும் காண்கிற அனுபவத்தை நிக்கொதேமுவிடம் கர்த்தர் இயேசு சொல்லும்போது:

ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தை காணமாட்டான் என்று மெய்யாகவே, மெய்யாகவே சொல்லுகிறேன் என்றார். இது சபை மக்களின் ஐக்கியத்தில் காணப்படும் மகிழ்ச்சியும் ஊழியத்தில் காணப்படும் சந்தோஷமே ஆகும். இதுவே மறுபிறப்பில் ஒரு விசுவாசி ராஜ்யத்தைக் காணும் அனுபவமாகும். ஆனாலும் ஒரு விசுவாசி மறுபிறப்பில் காண்கிற அனுபவத்தில் ஒரு குழந்தையே!

மேலும் மறுபிறப்பில் விசுவாசி காண்கிற அனுபவத்தில் வளர்ந்து ஆவியில் தேறி இராஜ்யத்தில் பிரவேசிக்கும் அனுபவத்தைப் பெற்று விசுவாசத்தில் மேல் விசுவாசம், பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தம், கிருபையின் மேல் கிருபை, மகிமையின் மேல் மகிமை இவ்வித அனுபவங்களினூடே மறுபிறப்படைந்த விசுவாசி கடந்து செல்லுகிறான். இதில் விசேஷம் என்னவென்றால் மேற்குறித்த அனுபவங்களுக்கு எல்லையில்லையாதலால் மகா பரிபூரணத்திற்கு கடந்து செல்ல கர்த்தர் வழிவகுத்து உள்ளார். அல்லேலூயா!

---

9. மறுபிறப்பு பெற்ற மனிதனும் பரிசுத்த ஆவியானவரும்!

வேதத்தில் நிக்கொதேமுவைப் பார்த்து இயேசு

நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நான் உனக்கு சொன்னதைக் குறித்து அதிசயப்படவேண்டாம்! காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது. அதின் சத்தத்தைக் கேட்கிறாய். ஆகிலும் அது இன்ன இடத்தினின்று வருகிறது என்றும் இன்ன இடத்திற்குப் போகிறதென்றும் தனக்குத் தெரியாது! ஆவியினால் பிறந்தவனெவனும் அப்படியே இருக்கின்றான் என்றார் (யோவான் 3;7,8). எனவே மறுபிறப்பு பிறந்தவன் தன் சொந்த வழியில் அல்லாமல் ஆவியானவரின் ஆளுகைக்கு தன் ஆத்தும சரீரத்தை ஒப்புக் கொடுத்து வழி நடத்தப்படுகிறவன் என்பதாகும்! அவனே தேவனால் பிறந்தவனாகும்!

இயேசுவானவரே கிறிஸ்து என்று அவனை பரிசுத்தாவியானவர் விசுவாசிக்க செய்கிறார் (I யோவா 5:1). தொடர்ந்து பரிசுத்தாவியானவர் பொறுப்பேற்று தேவ சித்தப்படி அம்மனிதனை நடத்துகிறார்! தேவனின் பாதுகாப்பில் அவனைக் கர்த்தர் நடத்துகிறார்! மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கும்போது, யோசேப்பும் அவரின் குடும்பமும் கல்யாண ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருக்கும் போதே ஆவியானவர் யோசேப்பின் வாழ்க்கையில் இடைப்பட்டு மரியாளிடம் தேவ சித்தத்தை நிறைவேற்றினார்.

மரியாளை தள்ளிவிட நினைத்திருந்த யோசேப்பிடம் கர்த்தர் தேவ நோக்கத்தை சொப்பனத்தில் வெளிப்படுத்தி உலக இரட்சகர் இயேசு பிறக்கிறவரையில் யோசேப்பு மரியாளை அறியவில்லையென்றும், தேவசித்தத்திற்கு கீழ்ப்படிந்தான் என்றும் அறிகிறோம். எனவே மரியாளும் யோசேப்பும் பரிசுத்த ஆவியானவருக்கு ஒப்புக் கொடுத்தலை இங்கு காண்கிறோம்! எனவே மரியாளும் யோசேப்பும் மறு பிறப்பு பிறந்தவர்களே (மத்தேயு 1:18-25). இவ்வுலகத்தில் கிறிஸ்து பிறந்ததினால் தேவனுக்கு மகிமை உண்டானது (லூக் 2:14). தன் குமாரன் இயேசுவின் நிமித்தமாய் தனக்குண்டான மகிமையை எண்ணித் தேவன் அதிகமாய் சந்தோஷப்பட்டார். கிறிஸ்து பிறந்து, தேவனை மகிமைப்படுத்தி

ஞர். இதுபோன்றே ஒவ்வொரு பாவியின் உள்ளத்திலும் தாம் பிறந்து தன்னை மகிமைப்படுத்தும்படி கர்த்தர் சித்தம் கொண்டார்.

பவுலும், கலாத்தியருக்கு எழுதும் நிருபத்தில், என் சிறுபிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக கற்பவேதனைப் படுகிறேன் என்று தன் ஆத்தும வாஞ்சையை தெள்ளென விளக்கிச் சொல்லுகிறார் (பிலிப்பியர் 4.19). எனவே ஒருவன் மறுபிறப்பின் மூலம் கிறிஸ்து, ஒரு விசுவாசியின் உள்ளத்தில் பிறந்திருப்பாரானல், அந்த மனிதன் மற்ற மனிதர்களை கிறிஸ்துவுக்குள் வழி நடத்தும்படியாக ஆவலுள்ளவனாக இருந்து தன் சாட்சியையும் சுவிசேஷத்தையும் அறிவித்து ஆத்துமாக்களை ஆதாயப் படுத்துவான்! நீ மறுபிறப்பு பிறந்திருந்தீரானல் ஆத்துமாக்களுக்காக கற்ப வேதனை நிச்சயம் அடைவாய்.

இவ்விதமாகவே ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் ஆவியானவர் திடீரென்று இடைப்பட்டு அவனைத் தன் ஆளுகையில் நடத்தி மேன்மைப் படுத்துகிறார்! இதுபோன்றே ஆவியில் பிறந்தவன் நடத்தப்படுகிறான். தேவ ஆவியால் நடத்தப்படுகிற இரகசியம் இதுவே! எனவே இதை வாசிக்கிற சகோதர சகோதரிகளே, மரியாளின் வயிற்றில் ஆவியில் இயேசு பிறந்தது போன்று. இயேசு ஆவியில் உன்னில் பிறந்திருக்கிறாரா?

ஆகவே வேதத்தில் அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது (யோவா 1:12). அவர்கள் இரத்தத்தினாலாவது, மாமிசத்தினாலாவது, புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல் தேவனாலே பிறந்தவர்கள் என்று (யோ 1:12,13) வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஒரு மருத்துவமனையில் ஒரு நர்ஸ் பிறந்த குழந்தையை தொப்புள் அறுத்து குளிப்பாட்டி, உப்பால் சுத்திகரித்து அந்த குழந்தை இன்னார் இன்னார் பெயருடைய தாய் தந்தையர் குழந்தை என்று அரசாங்க பதிவேட்டில் பெயர்ப் பதிவு செய்து குழந்தைக்கு அடையாளமிட்டு, பெற்ற தாயிடம் குழந்தையை மருத்துவதாதி கொண்டு வந்து ஒப்படைப்பது போல மருத்துவதாதிக்கு (நர்ஸ்க்கு) ஒப்புமையான பரிசுத்தாவியானவரும் பாவத்தில் பிறந்த மனிதனை பாவத் தொடர்பிலிருந்து பிரித்து இயேசுவின் இரத்தத்தால் கழுவி பரிசுத்தப்படுத்தி பரிசுத்த ஆவியானவரால் பாவசுபாவங்களின் கறைகள் மறுபடியும் வராதபடி பாதுகாப்பாக இருந்து நீதியின் வஸ்திரங்களால் அவனைச் சுற்றுகிறார் (வெளி 19:8). பிறகு ஜீவ புஸ்தகத்தில் பெயர் எழுதும்படியாக தேவனுக்கு தெரியப்படுத்தி ஆவிக்குரிய தாய் தகப்பனாக இருக்கிற நம் ஆண்டவராகிய இயேசுவினிடத்தில் ஒப்படைக்கிறார்.

அவர் அவனை ஆவிக்குரிய சபையில் சேர்ந்து ஞானஸ்நான கட்டளைக்கும் ஆவியானவர் அபிஷேகத்திற்கும் பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தத்திற்கும் வழி நடத்தி வரும்படி ஆவிக்குரிய சபை போதகனிடத்தில் ஒப்படைக்கின்றார்! இவர்கள் பாவ உலகின் அனுபவத்திலிருந்து தேவராஜ்யத்தின் அனுபவத்தில் பயிற்சி பெற வந்தவர்களாகும்! எனவே வேதத்தில் இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது (அப்போஸ்தலர் 2:47). இவ்விதமாக மறுபிறப்பு பிறந்த ஒரு விசுவாசி, மறுபிறப்பு பிறந்து தேர்ச்சியடைந்த விசுவாசிகளின் ஐக்கியமாக ஆவிக்குரிய சபையில் சேர்ந்து, பூரண உபதேசத்தில் வளர்ச்சியடைந்து பூரண புருஷனாக மாறவேண்டும் என்று வேதவசனம் என்ன சொல்லுகிறது என்று கவனிப்போம்!

மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்க

பூரண புருஷராகும் வரைக்கும் தேர்ச்சியடைந்து பரிசுத்த வான்களாகி, பிறகு கிறிஸ்துவின் சபையாக பெயர்சூட்டப் பட்டு பக்திவிருத்தியடைந்து, வரப்போகிற இயேசுவுக்கு மணவாட்டியாக மாறவேண்டும் (எபேசியர் 4:11,12). இதுதான் ஒரு விசுவாசியின் ஆவிக்குரிய தேர்ச்சியாகும்!

---

10. மறுபிறப்பு பெற்றவனின் அச்சடை யாளமும் குணாதிசயங்களும்!

ஆவியில் பிறத்தல் என்பதும், மறுபிறப்பு என்பதும், தேவனால் பிறத்தல் என்பதும், புதிய பிறவி என்பதும் ஜெநிப்பித்தல் என்பதும், புதுசிருஷ்டி என்பதும் ஒன்றே யாகும்.

1. வேதத்தில் அவர் நீதியுள்ளவராயிருக்கிறார் என்று உங்களுக்கு தெரிந்திருப்பதினால் நீதியைச் செய்கிறவன் எவனும் அவரில் பிறந்தவன் என்று அறிந்திருக்கிறோம் (I யோவான் 2:29). கர்த்தர் இயேசு நீதியுள்ளவராக இருக் கிறார் என்றும், அவர் நமக்கு ஜீவனைக் கொடுத்து நம்மைப் பாவத்திலிருந்து மீட்டது போன்று நாமும் நம் ஜீவனைக் கொடுத்து பாவத்திலிருக்கும் மக்களை மீட்கும்படியாக தன் பொருள் உடமை தன் ஜீவன் தன் வாழ்நாள் இவைகளை ஒப்புக்கொடுத்து பாவத்தில் உழன்று கொண்டிருக்கும் மக்களை கிறிஸ்துவுக்குள் கொண்டுவருவதே தேவ நீதியாகும். இப்பணியை தலைமேற்கொண்டு மனப்பூர்வமாக நிறை வேற்றுகிறவனே தேவனால் பிறந்தவனாகும். அதுமட்டுமன்று பரலோக ராஜ்யத்தின் பணிக்காக தன் ஆவி ஆத்துமா சரீரத்தை ஒப்புக்கொடுத்தவன் என்பதாகும்!

2. தேவனால் பிறந்தவன் பாவம் செய்யான் ஏனெனில் அவ ருடைய வித்து அவனுக்குள் தரித்திருகிறது. அவன்தேவனால் பிறந்தபடியால் பாவஞ்செய்ய மாட்டான் (I யோ 3:9). தேவனால் பிறந்தவனுக்குள் தேவனுடைய வித்தாகிய ஆவி யாயும் •ஜீவனுயுமுள்ள வசனம் அவனில் தரித்திருக்கிறது. ஒரு விசுவாசி பாவம் செய்ய முனையும்போது தேவ வார்த்தை

யானது ஆவியாயும் ஜீவனுமாயிருந்து, ஜீவனும் வல்லமை யுள்ளதாயிருந்து, இரு புறமும் கருக்குள்ளதுமாயிருந்து, ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும், ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும் இருந்து இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுத்து பாவத்தின் கொடூரதன்மையையும் தேவனின் நியாயத்தீர்ப்பையும் பாதாளத்தின் எரிநரகத்தையும் படம் பிடித்து விசுவாசியின் மனக்கண்முன் காண்பித்து எச்சரிக்கிறது.

எனவே பாவம் செய்ய முற்படும் விசுவாசி ஐயோ, நான் பாவிதான் என அலறி தன்னை கிறிஸ்துவுக்குள் அடக்கிக் கொண்டு பாவத்திற்கு விலகி ஓடுகிறான். பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான் யோசேப்பு எப்படி பாவத்திற்கு விலகி ஓடினான் என்பதை சற்று நினைவுப்படுத்திக் கொள்ளுங்கள்! யோசேப்பு என்ற தேவனுடைய மனுஷனை இழுத்தது ஒரு 'ஸ்திரீ'. இந்த 'ஸ்திரீ' தேவ பயமில்லாத நடத்தைக் கெட்டவள் என்றால் பொருந்தும். அவள் பார்வோனின் பிரதானியின் மனைவி, இவளை ஆவிக்குரிய விஷயத்தில் ஆராய்ந்து பார்த்தால், தள்ளப்பட்ட பிசாசின் உடன் பணி புரியும் பிசாசின் மனைவி. இந்த மனைவி யாரென்றால் கர்த்தரின் வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் மறுபிறப்பின் அனுபவத்தில் இல்லாதிருக்கும் திருச்சபைகளும் சபைகளுமாகும்.

இப்படிப்பட்ட ஆவியில்லாத சபைகளுக்கு தேவபக்தியுள்ள யோசேப்புக்கள் விலகி ஓடவேண்டும் என்பதே தேவ கட்டளை. இப்படிப்பட்ட பரிசுத்தவான்களைத்தான் ஸ்திரீகளில் ரூபவதியே என்றார் (உன் 1:8). கர்த்தருக்கு நீவிர் உண்மையில் ஆவிக்குரிய மணவாட்டியா? (வெளி 20:4).

3. அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து அவரை அறிந்திருக்கிறான் (I யோவான் 4:7). தன்னை மண்ணென்றும், பாவத்தில் ஜீவித்த என்னை கல்வாரியில் தன் ஜீவனைக் கொடுத்து என்னை மீட்டெடுத்த இயேசு தான் என் இரட்சகர், என் கர்த்தர் என்னை பரலோக ராஜ்யத்திற்கு

வழி நடத்தி, நித்திய ஜீவனைக் கொடுக்கிறவரும் அவரே என்று அறிந்தவனே தேவனால் பிறந்தவன். இப்படிப்பட்டவன் இவ்வுலகத்தில் எல்லாவற்றைக் காட்டிலும் இரட்சகர் இயேசுவின் மீது அன்பு செலுத்துகிறவனாகவுமிருக்கிறான். இயேசு கிறிஸ்துவின் அன்பு தெய்வீக(திவ்விய) அன்பு அவனில் வாசம் செய்து தன் சகோதரன் அவன் தன் மனைவி பிள்ளைகளுக்கும் உடைமைகளுக்கும் துரோகம் செய்யாதிருக்கிறான்.

4. வேதத்தில் அவரில் நிலைத்திருக்கிறேன் என்று சொல்லுகிறவன் இயேசு நடந்தது போல அவனும் நடக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது (I யோவா 2:6). ஆகவே பரிசுத்தாவியானவரின் பெலனைக் கொண்டு கர்த்தர் இயேசுவைப் போல் நடக்க முடியும். அவரைவிட மேலான அற்புதங்களையும் செய்ய முடியும் என்று வேதம் சொல்லுகிறது. எனவே ஒரு விசுவாசி தேவனில் அன்பு வைத்தால் மறுபடியும் பிறக்கவேண்டும்! மேலும் மேலும் வேதத்தை ஆராய்ந்து கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ந்து அறிந்து தொடர்ந்து போக வேண்டும்! இப்படிப்பட்டவன் தேவனால் அறிந்தவன் அன்பில் நிறைந்தவன் கர்த்தரை முற்றிலும் அறிந்து வருவதில் வேத அறிஞனாகும்.

5. இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கின்றான் (I யோவா 5:1). உலக மக்களின் பாவங்களை மன்னிக்க வந்த இயேசுவே ஆவியினால் அபிஷேகம் செய்ய வந்த கிறிஸ்து என்று இரட்சிப்பையும் ஆவியின் அபிஷேகத்தையும் விசுவாசத்தினால் பெற்று தேவசித்தத்தை செய்கிறவன் தேவனால் பிறந்தவனாகும். மற்றபடி இயேசுவைமட்டும் விசுவாசித்து ஆவியின் அபிஷேகத்தை விசுவாசித்து பெற்றுக் கொள்ளாதவன் தேவனால் பிறந்தவனல்ல. அப்படிப்பட்டவன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாதல்லவா? (யோவான் 3:3, 5) இயேசுவாகிய இரட்சிப்பைப் பெற்று கிறிஸ்துவாகிய அபிஷேகத்தில் நிறைந்து ஆவியில் வளராதவன் தேவனால் பிறந்தும் பயனில்லை. அவன் தேவராஜ்யத்தை மனக்கண்முன் காண

கிற அனுபவத்தில் நின்று விடுகிறுன் (யோ 3:3). எனவே ஒரு விசுவாசி வளரவேண்டுமானுல், அவன் ஜலத்திறுைம் ஆவியினுலும் பிறக்கவேண்டும். அப்பொழுதுமட்டுமே அவன் தேவராஜ்யத்தில் பிரவேசிக்கும் அனுபவத்தை அடையும் முதற்படியில் அடியெடுத்து வைக்கிறுன். பிறகு பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தம், கிருபையின் மேல் கிருபை, மகிமையின் மேல் மகிமையடைய முடியும்!

6. தேவனுல் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்:-

தேவனுல் பிறப்பது தேவ அன்பு, தேவ சந்தோஷம், தேவ சமாதானம், தேவநீடிய பொறுமை, தேவ தயவு, தேவ நற்குணம், தேவ விசுவாசம், தெய்வீக சாந்தம், தெய்வீக இச்சையடக்கம் என்பவைகளாகும். இவைகளின் அடிப்படையில் கிடைக்கும் எல்லாமே உலகத்தை ஜெயிக்கும்! உலகம் என்பது மாமிசம் உலகம் பிசாசு ஜீவனத்தின் பெருமை கண்களின் இச்சை மாமிசத்தின் இச்சை முதலானைவகளே! மேற்கூறிய தெய்வீக சுபாவங்களினுல் உலகத்தை ஜெயிக்கக் கூடும்! கர்த்தர் இயேசு உலகத்தை ஜெயித்தது மேற்கூறிய தெய்வீக சுபாவங்களினுல் தான்! இந்த தெய்வீக (திவ்விய) சுபாவம், ஒரு விசுவாசி மறுபிறப்பாகிய தேவனுல் பிறந்தால் தான் அவனுக்கு ஈடாக நன்கொடையாக தேவன் தந்து விடுகிறுர்.

இந்த ஈவாகிய (நன்கொடை) ஆவியின் கனி கிறிஸ்துவில் நிலைத்திருந்தால் மட்டுமே மேற்கூறிய சுபாவங்களில் நிலைத்திருக்கவும் வளர்ச்சியடையவும் மற்றவர்களுக்கு நற்சாட்சியாயிருந்து அவர்களுக்கும் இக்கனிகளைக் கொடுக்க முடியும்! அப்பொழுது மட்டுமே உலகத்தில் ஜீவிக்கிற மனிதனை ஜெயித்து கிறிஸ்துவண்டை வழி நடத்த முடியும். எனவே தான் இயேசு சொன்னுர் (யோ 15:1-5) நானே திராட்சை செடி நீங்கள் கொடிகள் ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. உலகத்திலிருந்து வெட்டப்பட்டு கிறிஸ்துவின் திராட்சை செடியில் இணைக்கப்பட வேண்டும்.

சிலுவையில் அறையப்பட்ட கள்ளர்களில் ஒருவன் இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்டான்; உள்ளான மனுஷனில் மறுபடியும் பிறந்தான். ஆகாத திராட்சை செடியாக இருந்த அவன், வெட்டப்பட்டு கிறிஸ்துவின் திராட்சை செடியில் ஒட்டப்பட்டான். அவன் பரதீஸ் சென்ற போதும் ஈராயிரம் ஆண்டுகளாக கனி கொடுத்து கொண்டிருக்கின்றான். போதகர்கள் அவனைக்குறித்து பேசியும், சாட்சியிட்டும் கோடிக்கணக்கான பாவிகள் மனந்திரும்பி கிறிஸ்துவுக்குள் இணைக்கப்படுகிறார்கள். கள்ளன் கிறிஸ்துவில் இணைக்கப்பெற்று உலகத்தை ஜெயித்தான். நீங்கள் உலகத்தை ஜெயித்தீர்களா?

11. மனிதன் ஆவியில் பிறத்தலின் அவசியமும் அதனால் வரும் பலனும்!

வேதத்தில்! உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாமிசத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்கு கொடுப்பேன் என்றும் உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும் பண்ணுவேன் என்று மறுபிறப்பு பிறத்தலில் கிடைக்கும் பரிசுத்தத்தையும் ஆசீர்வாதத்தையும் கர்த்தர் வெளிப்படுத்தியிருக்கிறார் (எசேக்கியல் 36:26).

மேலும் மறுபிறப்பின் சுத்திகரிப்பின் மூலமாக நமக்கு கிடைக்கும் ஆசீர்வாதத்தை அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடும்போது, நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும் மனுஷர் மேலுள்ள அன்பும், பிரசன்னமான போது, நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல் தமது இரக்கத்தின் படியே, மறுஜென்ம முழுக்கினாலும் (மறுபிறப்பின் சுத்திகரிப்பினாலும்) பரிசுத்த ஆவியினுடைய சுத்திகரிப்பினாலும் நம்மை இரட்

சித் தார் (தீத்து 3:5). தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராகத் தக்கதாக அவர் நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் அந்தப் பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார் என்று அப். பவுல் மூலமாய் ஆவியானவர் அருளியிருக்கிறார். எனவே ஒரு விசுவாசியின் மறுபிறப்பின் மூலம் ஜல ஞானஸ்நானமும் ஆவியின் ஞானஸ்நானமும் நிறைவேறும் போது இரட்சிப்பு ஆரம்பிக்கிறது. இது பாவ உலகத்திலிருந்து ஒரு மகத்தான விடுதலையாகும். இப்பொழுது இந்த விசுவாசி பரலோக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினராகும்!

மேற்கூறிய அனுபவங்களெல்லாம் தேவனின் வார்த்தைகளை கேள்விப்பட்டு உள்ளத்தில் தேவனின் வார்த்தையாக விசுவாசித்து ஏற்றுக் கொள்ளும்போது, எந்த மனிதனும் மறுபிறப்பின் அனுபவத்தை அடைந்து ஆவி, ஆத்துமா, சரீர இரட்சிப்பைப் பெற்று இரட்சிப்பின் பாதையில் ஓட ஆரம்பித்து வளர்ச்சியின் மேல் வளர்ச்சியடையும் அனுபவத்தை அடைகிறான். அல்லேலூயா!

---

12. தேவ வார்த்தையின் மூலம் பிறத்தலும் ஆவிக்குரிய நிருபங்களும்!

வேதத்தில் எத்தியோப்பியன் தன் தோலையும், சிவிங்கி தன் புள்ளிகளையும் மாற்றக்கூடுமோ? கூடுமானால், தீமை செய்யப் பழகின நீங்களும் நன்மை செய்யக் கூடும் என்று ஆவியானவர் தெளிவாக எழுதிவைத்துள்ளார். எனவே ஒரு மனிதன் சுபாவத்தால் அறிவாற்றலால் திறமையால் மறுபிறப்பு அடையயியலாது என்று யூகித்து உணருகிறோம்.

ஆகவே வேதத்தில் அழிவுள்ள வித்தினாலே அல்ல. என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிபிக்கப் பட்டிருக்கிறீர்களே என்றும் (I பேதுரு 1:23) மேலும்

அவர் சித்தம் கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மை சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார் என்றும் (யாக் 1:18) இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார் என்றும் (I பேதுரு 1:4) கர்த்தர் இவ்விதமான வாக்குத்தங்களினூடே தம்மை வெளிப்படுத்தி, இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின என்று நம்மை திடப்படுத்தி (II கொரி 5:17) பரலோக மகிமைக்கு பயிற்சி கொடுத்து வருகிறார்.

எனவே மேற்கூறிய மறுபிறப்பின் அனுபவத்தையும் அதனால் வரும் ஆசீர்வாதங்களையும் பெற்று. கர்த்தரின் பிள்ளைகளாகிய நாமும் இந்த சந்ததியினருக்கு ஜீவனுள்ள சாட்சியாக இருக்கிறோம் என்பதை பவுல் தன் நிருபத்தில் கூறுவதை வாசிப்போம்! எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும் சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள் தானே.

ஏனெனில் நீங்கள் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்களென்று வெளியரங்கமாயிருக்கிறது; அது மையினாலல்ல, ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினாலும், கற்பலகையினாலல்ல, இருதயங்களாகிய சதையான பலகைகளினாலும் எழுதப்பட்டிருக்கிறது என்று பவுல் திடமனதோடு சவால் விட்டுக் கூறுகிறார் (II கொரி 3:3).

எனவே மறுபிறப்பும் இரட்சிப்பும் பெற்ற தேவனுடைய பிள்ளைகள் இச்சந்ததியினருக்கு மறுபிறப்பையும், இரட்சிப்பையும் வெளிப்படுத்தும் ஆவிக்குரிய நிருபங்களாக இருக்கிறார்கள் என அறிகிறோம்! மேலும் கர்த்தர் யோபுவுக்கு உத்தரவாக பேசும்போது. இப்போது நீ முக்கியத்தாலும் மகத்துவத்தாலும் உன்னை அலங்கரித்து, மகிமையையும்

கனத்தையும் தரித்துக் கொள்ளும்படியாக யோபுவுக்கு
அறிவுரை சொல்லுகிறார் (யோபு 40:10). கர்த்தர் யோபு
வுக்கு கூறிய அறிவுரையாகிய மறுபிறப்பின் அனுபவத்தா
லும் தேவசாயலின் மகத்துவத்தாலும் ஒவ்வொரு மனிதனும்
தரித்துக்கொள்ள வேண்டியது அவசியம் என்று உணரு
கிறோம்!

13. மறுபிறப்பில் நிக்கொதேமுவின் அரிய செயல்கள்!

நிக்கொதேமு என்ற அம் மனிதன் இயேசுவிடம் வரும்
பொழுது அவன் பரிசேயனாக இருந்தபடியாலும் யூதர்களுக்கு
பயந்தபடியாலும் இஸ்ரவேலில் போதகனாக இருந்து இவனு
டைய அதிகாரிகளுக்கு பயந்தபடியாலும் யாவரும் காணாத
படி இயேசுவைக் காண இராக்காலத்தில் வந்தவனாக இருந்
தான்!

இவனுக்கு வேலையைப்பற்றிய பயம், அதிகாரிகள் வேலை
யைப் பறித்துக்கொள்வார்களோ என்ற பயம்; யூதர்கள்
தன்னைக் கொலை செய்து விடுவார்களோ என்ற பயம். இவை
யனைத்தும் இவனை ஆட்கொண்டு மறுபிறப்பின் தன்மைக்கு
முட்டுக்கட்டைகளாக இருந்தன!

ஆயினும் இயேசுவின் போதனை அவனை உள்ளும் புறம்பு
மாக ஆட்கொண்டதின் விளைவாக இராக்காலத்தில் வந்த
நிக்கொதேமு இப்பொழுது பகற்காலத்தில் வந்து இயேசு
வைக் கொலை செய்ய வகைத் தேடி வந்த யூதர்களையும்,
பரிசேயர்களையும், சதுசேயர்களையும் நோக்கி தைரியமாக
அவர்களுக்கு முன் நின்று:

ஒரு மனிதன் சொல்வதைக் கேட்டு அவன் செய்கைகளை
அறிகிறதற்கு முன்னே அவனை ஆக்கினைக்குட்படுத்தலா
மென்று நம்முடைய நியாயப்பிரமாணம் சொல்லுகிறதா
என்று சொல்லி உபாகமம் 17-ஆம் அதிகாரம் 6 முதல் 12
வசனங்கள் வரையில் உள்ள கருத்துக்களைக் குறிப்பிட்டுக்

காட்டி இயேசுவைக் குறித்து சிபாரிசு செய்து பேசினன் (யோவா 7:50,51). இதன் மூலம் நிக்கொதேமுவின் உள்ளத்தில் இயேசுவாகிய இரட்சகர் தங்கிவிட்டார் என்பதும் இவன் தேவனில் பிறந்துவிட்டான் என்றும் தெள்ளென அறிகிறோம்! பாருங்கள்! இரவில் பயந்து பயந்து வந்தவன் இயேசுவை ஏற்றுக்கொண்டு பயத்தைவிட்டு பகலில் ஆயிரக் கணக்கான யூதர்கள் சேவகர்கள் பரிசேயர்கள் மத்தியிலே தைரியமாக அறைகூவல் விடுத்துப் பேசி தன் மறுபிறப்பு அதாவது தான் தேவனால் பிறந்திருக்கிறதை கிரியைகள் மூலமாக நிரூபித்தான்.

மறுபிறப்பு என்பது இவ்வுலகத்திற்கு பயப்படாமல் இயேசுவுக்கு சாட்சியாயிருந்து இவ்வுலகத்தில் இரட்சகர் இயேசு நடந்தது போல (I யோ 2:6) தானும் பரிசுத்தமாய் நடந்து ஆத்துமாக்களை பரலோகத்திற்கு வழிநடத்தும் சாட்சியில் உறுதியாய் நின்று ஆவிக்குள் வளருவதே மறுப் பிறப்பின் தன்மையாகும்!மேலும் கூடாரப் பண்டிகைக்கு வந்திருந்த ஆயிரக்கணக்கான யூதர்களில் ஒருவனாவது நிக்கோதேமுவை எதிர்த்துப் பேச இயலவில்லை. பரிசுத்த ஆவியானவர் எதிர்த்து வந்த யூதர்களின் கைகளையும், கால்களையும், நாவையும் கட்டிப்போட்டு நிக்கொதேமுவை காத்துக் கொண்டார்! பூரண அன்பு, பயத்தை புறம்பே தள்ளும் (I யோவா 5:18) என்ற வசனத்திற்கேற்ப நிக்கொதேமு இயேசுவினிடத்தில் பூரண அன்பு உடையவனாயிருந்தான். மறுபிறப்பின் தன்மை ஒருவனுக்குள் எவ்வாறு அதிசயமாக கிரியை செய்கிறது என்பதை கவனித்துப் பாருங்கள்!

14. சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் சரீரமும் நிக்கொதேமுவின் வீரமும், ஓட்டம் பிடித்த சீஷர்களும்!

மேலும் வேதத்தில் இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான். பிறப்பித்தவரிடத்தில் அன்பு கூறுகிற எவனும் (இரட்சகர் இயேசு

வில் அன்பு கூறுகிற எவனும்) அவரால் பிறப்பிக்கப்பட்டவனிடத்திலும் அன்பு கூருகிறுன் (1யோ 5:1) என்ற வசனத்தின்படி நிக்கொதேமு திகழ்ந்தான் என்பதற்கு ஐயமேயில்லையல்லவா. மறுபிறப்பில் பிறந்த ஒரு விசுவாசி எவ்விதமாக யார் யாரிடத்தில் அன்புகூர வேண்டும் என்பதை ஆவியானவர் தெள்ளென விளக்கியிருக்கிறுரல்லவா? இவ்வாறு நிக்கொதேமு தன்னை இயேசுவுக்கு ஒப்படைத்தவனுகவும் மறுபிறப்பின் தன்மை அடைந்தவனுகவும் ஆவியானவருக்கு தன்னை முற்றிலும் ஒப்புக் கொடுத்தவனுகவும் இயேசுவையே பின் தொடர்ந்தான் என்பதை அவனின் பின்வரும் காரியங்கள் விளக்குகின்றன! எனவே மறுபிறப்பின் சிலாக்கியம்தான் என்னே! அல்லேலூயா!!

நிக்கொதேமு முதன் முதலில் இரவில் பயந்து வந்தவன். இயேசுவை சந்தித்த நாள்முதல் பயத்தையெல்லாம் விட்டு பகலில் வந்து இயேசுவைக் குறித்து சிபாரிசு செய்து இயேசுவுக்கு சாட்சியாக இருந்தான். இப்பொழுது கல்வாரி மலைக்கு ஓடிவருகிறுன். தன் அன்பு நேசர் தன்னை பரலோக ராஜ்யத்திற்கு ஆயத்தப்படுத்தின உலக இரட்சகர் சிலுவையில் ஆணிகள் கடாவப்பட்டு தலையிலிருந்து பாதம்வரை இரத்தம் வடிய மரித்து கிடக்கும் கோரக்காட்சியைக் கண்டு கண்ணீர் விடுகிறுன்! ஏன்! ஏன்!! ஏன்!!! என்று கேள்வி அவன் உள்ளத்தில் எழுகிறது!

ஆயினும் இராக்காலத்தில் அவனுேடு இயேசு பேசிய வசனங்களின்படியே கர்த்தர் சிலுவையில் உயர்த்தப்பட்டிருக்கிறுர் என்று எண்ணி தன்னை முற்றிலும் தேற்றிக் கொள்கிறுன்! உலகத்தின் பாவங்களை மீட்கும்படியாக இயேசு தன் ஜீவனைக் கொடுக்க வேண்டியது அவசியம் என்று உணர்ந்து ஆறுதலும் தேறுதலும் அடைகிறுன்! உலக இரட்சகராம் இயேசுவை சிலுவையில் அறைந்த நாளில் எல்லோரும் அவரை விட்டு ஓடிவிட்டார்கள். அவர் நம்பிய சீஷர்களும், இயேசுவிடம் ஆழ்ந்த வாக்குறுதி கொடுத்த அனுபவமிக்க சீஷர்களாகிய பரிசுத்தவான்களெல்லாரும் ஓடியே விட்டார்

கள். உலகத்தை விட்டல்ல, உலக இரட்சகர் இயேசுவை விட்டு!

இயற்கை சூழ்நிலையில் மாறுதல், அதிர்ச்சியும் அந்தகாரமும் சூழ்ந்து கொண்டது (மத் 27:45). சிருஷ்டிப்புகளெல்லாம் கலங்கித் தவிக்கின்றன! மேலான சிருஷ்டிப்பாகிய மனிதன், கல்வாரியின் காருண்யத்தை உணராது புறமுதுகு காட்டி ஓடுகிறான்! என்னே சீஷர்களின் அன்பு!

---

15. இயேசுவின் சரீர அடக்கமும் அதன் மகத்துவங்களும்!

தன்னந்தனியராய் இயேசு சிலுவையில் மரித்தவராய் தொங்கிக் கொண்டு இருக்கிறார். மாலை நேரம் சாய்ந்து விட்டது. யூதமுறைப்படி இயேசுவின் சரீரத்தை இறக்கி அடக்கம் செய்ய பரிசுத்தவான்களில் யாரும் முன்வரவில்லை! இயேசு அநாதை சடலமாக கள்ளர் மத்தியில் ரோம போர்ச் சேவர்களால் எண்ணப்பட்டு அநாதை சடலமாக வீசி எறியும் நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. யூதமுறைப்படியும், ரோம அரசாங்க சட்டப்படியும் மாலை 6 மணிக்கு மேல் சிலுவையில் அறையப்பட்ட சரீரம் இருத்தல் கூடாது!

இதற்குள் அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பை பரிசுத்தஆவியானவர் ஏவி அனுப்ப, அரிமத்தியா யோசேப்பு துணிந்து போய் ரோம கவர்னர் பிலாத்துவினிடத்தில் இயேசுவின் சரீரத்தை கேட்டு சிலுவையிலிருந்து இறக்க அனுமதி பெற்றுக் கொண்டான் (லூக்கா 15:23). அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பும் நிக்கொதேமுவும் சிலுவையண்டை வந்து இயேசுவின் சரீரத்தை இறக்கினார்கள்.

நிக்கொதேமு மறுபிறப்பின் அனுபவத்தைப் பெற்றுக் கொண்டபடியால் இயேசுவின் சரீரத்தைத் தன் கைகளில் ஏந்திக் கொண்டு, அவருடைய மரணத்தை நினைவு கூருதலிலும் (கர்த்தரின் பந்தி) அடக்க ஆராதனையிலும் (ஞானஸ்நானம்) பங்கு கொண்ட அனுபவமான மேலான சிலாக்கியத்

தைப் பெற்றுக்கொண்டான். மிகுந்த செல்வந்தனுகிய அரிமத்தியா யோசேப்பும் இம்மேலான சிலாக்கியத்தையும், உன்னத பாக்கியத்தையும் பெற்றுக் கொண்டது மேன்மைக்குரியதும் போற்றுதற்குரியதாகும்! கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

மேற்கூறிய இயேசுவின் மரணத்தை சுமக்கும் நிகழ்ச்சியும் பின் கூறப்படும் இயேசுவின் சரீரத்தையும் அடக்கம் பண்ணும் நிகழ்ச்சியும், கர்த்தருடைய இராபோஜனத்தையும், ஞானஸ்நான உடன்படிக்கையையும் நினைவுகூருகிறதல்லவா! அல்லேலூயா! கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

இதை வாசிக்கிற கர்த்தரின் ஊழியர்களே, மேற்கூறிய அனுபவத்தில் தாங்களும் உறுதியாய் நின்று கர்த்தரையே தன் நம்பிக்கையாய் கொண்டிருக்கிற விசுவாசிகளுக்கு வழிகாட்டியும் கர்த்தருக்கு நற்சாட்சியாய் நில்லுங்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! இதுவல்லவா நமது தலையாய கடமை! முதலாம் நூற்றுண்டு கால நிக்கொதேமுவையும் யோசேப்பையும் ஆசீர்வதித்து இம்மேலான சிலாக்கியத்தை அளித்த தேவன் இருபது நூற்றுண்டு கால கிருபையின் கால தேவபிள்ளைகளாகிய நம்மையும் அதிகமதிகமாக ஆசீர்வதிப்பாராக!

---

16. வெள்ளைப் போளமும் கரிய போளமும் அதன் மகத்துவங்களும்!

மேலும் கூறுமிடத்து, இயேசுவின் இரட்சிப்பின் நற்கந்தம் நிக்கொதேமுவை விடவில்லை. அவன் இயேசுவின் சரீரத்திற்காக வெள்ளைப்போளமும் கரியபோளமும் நூறு இராத்தல் கொண்டு வந்தான் என்றும் அவ்வளவு மதிப்புள்ள வாசனை தைலத்தையும் சுகந்த வர்க்கங்களுடனே சுற்றிக் கட்டிஞன் என்று வேதம் தெளிவிக்கிறது. வெள்ளைப் போளமும் கரிய போளமும் நூறு இராத்தல் இன்றைய மதிப்பு ஒரு லட்ச ரூபாயாகும். இயேசுவின் சரீரம் மண்ணுக்குத்தானே போகிறது என்று வீணாக எண்ணாமல் அவருடைய

சரீரம் மூன்றுவது நாள் உயிரோடு எழுந்திருக்கும் என்றும், தன் உடைமைகளை அவரது சரீர அடக்கத்திற்கு செலவு செய்து அவர் உயிர்த்தெழுதலுக்கு பங்காளியானுன். அல்லேலூயா!

வேதத்தில் பத்து என்ற எண் பூரணத்தைக் குறிக்கிறது. நூறு என்ற எண் பரிபூரணத்தைக் குறிக்கிறது. இந்த பரிபூரணம் பரலோகத்திலிருந்து இறங்கி வரும் பரம எருசலேம் நகரத்தைக் குறிக்கிறது. இந்த தேவ ராஜ்யத்தை நிக்கொதேமு அடைய தன் உடைகளை விற்று நூறு இராத்தல் வாசனை திரவியங்களை கொண்டு வந்து, இயேசுவின் அடக்க ஆராதனையை நிறைவேற்றினுன். எனவே நிக்கொதேமு தேவ ராஜ்யத்தில் அங்கம் வகிக்கிறவனுக இருப்பது மட்டுமல்ல இவ்வுலகத்திலும் அவன் சாட்சி பரிமள தைலம் போன்று கிருபையின் கால விசுவாசிகளாகிய நமக்கும் வாசனை வீசியபடியே இருக்கிறதல்லவா? என்னே அவன் அன்பு!

வெள்ளைப்போளம் மிகுந்த கசப்பும், அழியும் சரீரத்தை பாதுகாக்கும் கலவை கலந்ததும் ஆகும். இதுபாடுகளையும் துன்பத்தையும் குறிக்கும்! கரியபோளம் மிகுந்த நறுமணம் உள்ளது. இது ஒரு மைல் சிறிது நேரத்திற்குள் தென்றலில் கலந்து சென்று பறந்து திரியும் தேன் சிட்டுப்பறவைகளையும் வித விதமான வண்டு வகைகளையும் தேன் உண்ணும் வண்ணத்துப் பூச்சிகளையும், கவர்ந்து கொண்டு வரும் ஆற்றல் வாய்ந்தது இக்கரியபோளம்!

இன்றைக்கும் இவ்வுலகத்தின் ஆசாபாசங்களில் அற்ப சந்தோஷங்களில் ஈடுபட்ட கோடிக்கணக்கான வாலிப சகோதர சகோதரிகள் தேன் சிட்டுப்பறவைகளாகவும், வண்டு வகைகளாகவும் சுற்றித்திரிந்து பரிமள தைலமாகிய உயிர்த்தெழுந்த இயேசுவின் பாதத்தில் விழுந்து மயங்கிய வண்ணம் இருக்கிறூர்கள்! இயேசுவின் மகத்தான தேவனுகிய இரட்சிப்பைப் பெற்ற பரலோகத்தின் தேன் சிட்டுப்பறவைகளல்லவா விசுவாசிகளாகிய இவர்கள். ஆம், பரலோகத்

திற்கு உரியவர்கள் தான் இவர்கள். இவர்களின் சாட்சிகளின் நறுமணத்தை நுகர்ந்து உலக தேன்சிட்டுக்களே, இயேசுவிடம் ஓடிவாருங்கள்! நித்திய ஜீவனுகிய தேன் உங்களுக்கு கிடைக்கும்! அப்பொழுது மட்டுமே நீங்கள் யாவரும் பரலோக தேன்சிட்டுகளாக மாறுவீர்கள்! விண்ணுலகிற்கு ஜீவனேடு பறந்து செல்லும் காலம் விரைவாக எதிர் கொண்டு வருகிறதல்லவா? இவ்வுலகத்தின் பாடுகளையும் துன்பங்களையும் அற்ப மகிழ்ச்சியையும் அற்ப சந்தோஷங்களையும் தான் இயேசுவுக்காக ஒப்படைத்து கர்த்தர் இயேசுவின் உயிர்த்தெழுதலில் வரும் நித்திய மகிழ்ச்சி, நித்திய சந்தோஷம் பெறுவதற்கு ஒப்புமையாக உள்ளதல்லவா?

மேற்குறித்த நிக்கொதேமு மரித்தும் பேசுகிருர். ஆம்! இயேசுவின் மரணத்தை உலகுக்கு அறிவிக்க கிறிஸ்தவ நிக்கொதேமுக்களே, அரிமத்தியா யோசேப்புக்களே, நீவிர் எவ்வளவு செலவு செய்து இருக்கிறீர். இல்லையென்ருல் இப்பொழுது உங்கள் பணத்தை, நேரத்தை உங்கள் சரீர பெலத்தை, பொருளை, உடைமைகளை கர்த்தரின் மரணத்தை வெளிப்படுத்தவும் உயிர்த்தெழுதலின் சத்தியத்தைச் சாட்சியிடவும், தயங்காமல் செலவு செய்யுங்கள். இனி ஒருபோதும் கிடைக்கக்கூடாத கிருபையின் காலம் முடிவடையப் போகிறது. நாம் கர்த்தரின் ஊழியங்களுக்கு தாராளாமாய்க் கொடுத்து ஊழியத்தை நிறைவேற்றி ஆத்துமாக்களை கிறிஸ்துவுக்குள் சேர்த்து அவர் வருகைக்கு ஆயத்தப்படுத்திஞல், அதனுல் நமக்கு வரும் பலன் பரம ராஜ்யமாகிய பரம எருசலேமில் வாழுதலும் நித்திய ஜீவனைப் பெறுதலுமாகும்!

---

17. மறுபிறப்பும் அரிமத்தியா யோசேப்பும் அவர் தம் கல்லறையும்!

கனம் பொருந்திய அரிமத்தியா ஊரானும் தேவனுடைய ராஜ்யம் வரக் காத்திருந்தவனுமாகிய யோசேப்பு என்பவன் தன் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய

புதிய கல்லறையை இயேசுவுக்காகக் கொடுத்து விட்டான் (மத்தேயு 27:60).

அரிமத்தியா யோசேப்புக்கோ தற்பொழுது கல்லறை இல்லை. இயேசுவுக்காகக் கொடுத்து விட்டான். அவன் கடைசி ஆசை, தன் மரண நாளின்போது தன் சடலத்தை வைத்து அடக்கம் பண்ணும்படியாக வைத்திருந்த ஒரு புதிய கல்லறையும் யோசேப்பின் நீங்காத ஆசைகளும் விருப்பங்களும் இயேசுவுக்கு சொந்தமாயின!

அன்பார்ந்த கிறிஸ்தவ சகோதர சகோதரிகளே, உங்கள் கடைசி ஆசை என்ன? உங்கள் கடைசி ஆசைகளையெல்லாம் இயேசுவுக்காக ஒப்படைத்து விடமாட்டீர்களா? உங்களுக்கென்று கல்லறையை நியமித்து வைத்து இருக்கின்றீர்களா? வேண்டாம், வேண்டவே வேண்டாம்! கல்லறை உங்களை எழுப்பாது, இயேசுதான் உங்களை எழுப்புகிறவர்! கல்லறையைத் தேடுகிறதற்கு முன் இயேசுவில் மறுபிறப்பு அடைந்திருக்கிறோமா என்பதை நீங்கள் தயவு செய்து தீர்மானித்துக் கொள்ளுங்கள்! இல்லையானால் தேவனால் பிறக்க முயற்சி செய்யுங்கள்! அப்பொழுது இயேசுவின் வருகையில் நீங்கள் உயிரோடு இருந்தால் மறு ரூபமாகலாம்! மரித்து கல்லறையிலிருந்தால் கர்த்தர் இயேசு நிச்சயம் உங்களை சத்தியத்தின்படியே உயிரோடு எழுப்புவார்! நித்திய மகிழ்ச்சியையும் அளிப்பார்!

இயேசு தம்முடைய ஜீவனை நமக்காக கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்க கடனாளியாக இருக்கிறோம்! பாவத்தில் அழிந்து போகும் மக்களுக்காக இயேசுவின் மரணத்தை அறிவித்தீர்களா! இயேசுவின் கல்வாரி சிலுவையின் அன்பை அழியும் ஆத்துமாக்களுக்காகவும், சுவிசேஷ கூட்டங்களுக்காகவும் ஊழியங்களுக்காகவும் உங்கள் ஆஸ்தியில் எவ்வளவு செலவு செய்திருக்கின்றீர்கள்! புதிய ஏற்பாட்டின் கிருபையின் காலத்தில் தங்கள் ஆஸ்தியில் ஊழியம் செய்த 'ஸ்திரீகளை' அறியவில்லையா?

ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாக இருந்து தன்
சகோதரனுக்கு குறைச்சல் உண்டென்று கண்டு தன் இரு
தயத்தை அவனுக்கு அடைத்துக் கொண்டால் அவனுக்குள்
தேவ அன்பு நிலை கொள்ளுகிறதெப்படி? (I யோவா 3:17).
இயேசு அவனுக்காகவும் மரித்திருக்கிறாரல்லவா? என் சகோ
தர சகோதரியே, சிந்தித்துப்பார். என் பிள்ளைகளே, வச
னத்தினாலும், நாவினாலும் அல்ல, கிரியையினாலும் உண்மை
யினாலும் அன்புகூரக்கடவோம்! இதனால் நம்மை சத்தியத்
திற்குரியவர்களென்று அறிந்து நம்முடைய இருதயத்தை
அவருக்கு முன்பாக நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்
(I யோவான் 3:18,19) என்று அப்போஸ்தலன் யோவான்
கர்த்தரின் பிள்ளைகளுக்கு அன்பின் அறைகூவல் விடுவிக்
கிறாரல்லவா?

---

18. அரிமத்திய ஊரானாகிய யோசேப்பின் துணிவும் அந்தரங்கம் வெளியரங்கமாகி சாட்சியிடுதலும்!

அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு தேவனுடைய
ராஜ்ஜியத்திற்கு காத்திருந்தபடியால் இயேசுவைப் பின்
தொடர்ந்தான். அவனுடைய கல்லறையின் இன்றைய
மதிப்பு சுமார் ஐம்பதினாயிரம் ரூபாய் ஆகும். ஆயினும்
கல்லறையைக் கைவிட்டான்! இயேசுவை உறுதியாய்ப்
பற்றிப் பிடித்துக் கொண்டான். இவன் இயேசுவுக்கு சீஷனாக
இருந்தான் (மத்தேயு 27:57).

யூதர்களுக்கு பயந்து இயேசுவுக்கு அந்தரங்க சீஷனாக
இருந்த மனுஷன், மறுபிறப்பு அடைந்து தேவனால் பிறந்த
தினால் ரோம அரசாங்கத்தின் சட்டதிட்டங்களுக்குப் பயப்
படாமல் தான் அங்கத்தினனாயிருந்த யூத ஆலோசனை சங்கத்
தின் சட்டதிட்டங்களுக்குப் பயப்படாமல் ரோம கவர்னரா
யிருந்த பிலாத்துவினிடத்தில் துணிந்து போய் இயேசுவின்
சரீரத்தைக் கேட்டான் (மாற் 15:43). தனக்கு உரிமையான
கல்லறையில் இயேசுவை அடக்கம் பண்ணினான்; ஆவியில்

தன்னை கிறிஸ்துவோடு அடக்கம் செய்து உயிர்த்தெழுதலுக்கு பங்காளியாஞன் என்ருல் சாலப்பொருந்தும்.

இப்பொழுது அந்தரங்க சீஷஞயிருந்த அரிமத்தியா யோசேப்பு மறுபிறப்பினுலும் மறுபிறப்பின் கிரியையினுலும் வெளியரங்க சீஷஞய் மாறிவிட்டான் என்பதை தெள்ளென அறிகிருேம்! அந்தரங்க சீஷர்களே விசுவாசிகளே வெளியரங்கமாய் வந்து கிருபையின் காலத்தில் கிறிஸ்துவுக்கு சாட்சியாயிருங்கள். உன்னை தொடுகிறவன் அவருடைய கண்மணியைத் தொடுகிருன் (சகரியா 2:8). இயேசு கிறிஸ்துவில் ஒருவன் மறுபிறப்பு அடைந்துவிட்டால், அவனுடைய பயத்தை நீக்கி தெய்வீக சுபாவத்தில், தெய்வீக விசுவாசத்தில் துணிவு கொண்டவஞக இயேசுவிடத்தில் வழிநடத்துகிறதல்லவா? தேவனின் ஆவி இதை கிரேக்க மொழியில் 'ஜோ' (zoe) என்றும் 'தேவனின் சொந்தஜீவன்' என்கிறது.

பரிசுத்தாவியானவரே, இக்கிரியைகளை நடப்பித்து ஆவியில் பிறந்தவன் என்பதை உலகத்திற்கும், பரலோகத்திற்கும் கர்த்தர் சாட்சியாயிருக்கிருர். அல்லேலூயா! நீங்கள் கிறிஸ்துவில் பிறந்துவிட்டீர்களா? பரலோக அரசாங்கத்தில் அங்கம் வகித்துவிட்டீர்களா? ஆயத்தமாயிருங்கள் கர்த்தர் வருகிருர்!

---

19. மறுபடியும் பிறத்தலில் ஜலத்திஞல் பிறக்கும் அனுபவம்!

மறுபடியும் பிறந்த மனிதன் தேவஞல் பிறந்திருக்கின்றபடியால் தேவ மனுஷஞக இப்பொழுது காட்சியளிக்கின்ருன். இவன் தேவஞல் பிறந்திருக்கின்றபடியால் இவ்விசுவாசியை ஞானஸ்நான உடன்படிக்கையில் கொண்டுவந்து பரிசுத்த ஆவியானவர் உறுதிபடுத்துகிருர்; நிலை நிறுத்துகிருர்!

தேவனை விசுவாசித்தும் தேவ நீதியை நிறைவேற்ற தன்னை ஒப்புக்கொடுத்தபடியால் நீதியை செய்கிறவன்

எவனும் அவரில் பிறந்திருக்கிறான் என்றும் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது (I யோ 2:29).

அதற்கு ஒப்பனையாக ஞானஸ்நானமானது மாம்ச அழுக்கை நீக்குதலாய் இராமல் தேவனைப்பற்றும் நல்மனச் சாட்சியின் உடன்படிக்கையாய் இருக்கிறது (I பேதுரு 3:21) என்று சொல்லப்பட்டிருப்பதால், மறுபடியும் பிறந்த ஒரு விசுவாசியின் நல்மனசாட்சியின் உடன்படிக்கை அதாவது தான் ஒரு தேவனின் பிள்ளையாக இருக்கிறதாகவும், இனி தான் பரலோக அரசாங்கத்தில் பதிவு பெறுகிறவனாக இருந்து இரட்சகர் இயேசுவைப் பற்றிக் கொண்டு அவரின் எல்லா சத்தியத்திற்கும் கீழ்ப்படிந்து, 'நடப்பேன்' என்ற உறுதியும் நல்ல மனச்சாட்சியோடு மூழ்கி ஞானஸ்நானம் எடுத்து கரையேறி வருகிறான்!

இந்த உடன்படிக்கை தேவனுக்கும் மனுஷனுக்கும் ஏற்பட்ட சத்திய உடன்படிக்கை என்பதை ஒவ்வொரு விசுவாசியும் மனதில் பதித்து சத்தியத்தில் தவறாது நடக்க வேண்டும். இந்த நல்மனசாட்சியோடு ஆவிக்குரிய சபைகளில் அங்கம் வகித்து அப்போஸ்தல போதனையில் வளர்ந்து, பரிசுத்தத்தின்மேல் பரிசுத்தம் அடைந்து விசுவாசத்தின் மேல் விசுவாசம் அடைந்து, மகிமையின் மேல் மகிமையடையும் பாக்கியத்தை ஒரு விசுவாசி பெறுகிறான். இயேசுவின் வருகைக்கு எந்த நிமிஷமும் ஆயத்தமாயிருக்கிறான்!

கர்த்தரின் கட்டளைப்படியே பிதா குமாரன் பரிசுத்தாவியானவரின் நாமத்தில் ஜலத்தில் மூழ்கி ஞானஸ்நானம் எடுத்ததினால் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு பங்காளியாகிறான் (கொலோ 2:12).

1. தேவ நீதியை நிறைவேற்றுகிறான் (மத் 3:15).
2. வானத்தின் வழியாக போக வானம் திறக்கப்படுகிறது (மத் 3:16).
3. பரிசுத்த ஆவியானவர் அவனில் இறங்க வழி ஏற்படுகிறது (மத் 3:16).

4. தேவன் பிரியப்படுகிற மனிதனுக மாறுகிறுன் (மத் 3:17).

5. தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையே பரலோக அரசாட்சிக்கு அங்கத்தினனுகும் நித்திய உடன் படிக்கை ஏற்பட்டு விடுகிறது! அல்லேலூயா!

இப்படிப்பட்ட பரலோக ஊழியக்காரனைப் பார்த்து பாதாளம் நடுங்குகிறது! பரலோகம் மகிழ்கிறது!

Pastor B. Solomon
SERVANT OF GOD.
INDEPENDANT MINISTRY FOR CHRIST.
307. MURPHY TOWN. ULSOOR.
BANGALORE-560 008.
KARNATAKA STATE SOUTH INDIA.

52